


# இ-இன்வாய்ஸ்
# E-INVOICE

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்
## Frequently Asked Questions (FAQs)



# GST e-invoice/IRN System
# GST இ-இன்வாய்ஸ்/IRN சிஸ்டம்


**Frequently Asked Questions**
*அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்*


பொது நலன் கருதி வெளியிடுவோர்

**முதன்மை தலைமை ஆணையரகம்,**
**சரக்குகள் மற்றும் சேவைகள் வரி & மத்திய கலால் வரி,**
**தமிழ் நாடு & புதுச்சேரி மண்டலம்,**

*Issued in public interest*
***Office of the Principal Chief Commissioner of GST & Central Excise,***
***Tamil Nadu and Puducherry Zone, Chennai.***
Follow us **@cgstchennaizone**

आज़ादी का अमृत महोत्सव
विवेक जौहरी
अध्यक्ष
Vivek Johri
Chairman



सत्यमेव जयते

भारत सरकार
वित्त मंत्रालय
राजस्व विभाग
केन्द्रीय अप्रत्यक्ष कर एवं सीमा शुल्क
नॉर्थ ब्लॉक, नई दिल्ली-110 001
Government of India
Ministry of Finance
Department of Revenue
Central Board of Indirect Taxes & Customs
North Block, New Delhi-110 001
Tel. : +91-11-23092849, Fax : +91-11-23092890
E-mail : vivekjohri.irs@gov.in

2nd May, 2022

## முன்னுரை

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் மத்திய GST மண்டலம், சென்னை, இ-இன்வாய்ஸ் குறித்த அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் (FAQ) தொகுப்பை, குறிப்பாக தமிழில் மொழிபெயர்த்து, வெளியிடுவதை கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். 1-4-2022 முதல் இ-இன்வாய்சுக்கான ஒட்டு மொத்த விற்பனையளவு ரூ 20 கோடியாக குறைக்கப்பட்டுள்ளதால், இந்த கையேடு நிச்சயமாக பெரிய அளவில் வர்த்தகத்திற்கு உதவியாக இருக்கும்.

வணிகப் பரிவர்த்தனைகள் என்பது, பொருட்கள் அல்லது சேவை வழங்கல் ஆகிய இரண்டிலும் இன்வாய்ஸ் மூலமாகவே நிகழ்கிறது. விநியோகிக்கப்பட்ட லெட்ஜர் தொழில்நுட்பம், ஒருங்கிணைந்த தரவு, போன்ற நவீன தொழில்நுட்பத்தின் பரிணாம வளர்ச்சி, கையேடு வணிக முறை என்ற வழக்கை மாற்றி ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்புக்கு வழிவகை செய்துள்ளது. இது, வணிக நிறுவனங்களின் விநியோகச் சங்கிலியை எளிமையாக்குவது மட்டுமல்லாமல், அவர்களிடையே பாதுகாப்பான தரவு பரிமாற்றத்தையும் உறுதி செய்கிறது. மேலும், வணிகங்கள் தரவைத் திரும்பப் பெற வேண்டின், டிஜிட்டல் தடயத்தையும், மற்றும் தணிக்கைக்கு ஏதுவான தடயத்தையும் உருவாக்குகிறது. எனவே, இ-இன்வாய்ஸ் நவீன வணிகத்தில் இன்றியமையாத அங்கமாகிவிட்டது. உண்மையில், இ-இன்வாய்ஸ் முறை ITC நல்லிணக்கங்களை எளிதாக்குதல், இ-வே பில்லை நிகழ்நேரத்திலேயே உருவாக்குதல், போன்றவற்றால் வணிகம் செய்வதை எளிதாக்குகிறது மற்றும் தரவுகளை சீர்படுத்தி உள்ளீடு பிழைகளை நீக்கி வரி விதிகளுக்கு உட்படுவதை மேம்படுத்துகிறது.


இ-இன்வாய்ஸ் தயாரிப்பின் போது வரி செலுத்துவோர் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களை தெளிவுபடுத்தி, அதன் மூலம் புதிய அமைப்புக்கு தாமாகவே உட்படுதலை ஊக்குவிக்க, இந்தத் தொகுப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வணிகம் மற்றும் தொழில்துறையின் பரவலான தேவைகளுக்காக இத்தகைய பயனுள்ள வெளியீட்டைத் தெளிவான முறையில், குறிப்பாக தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட GST சென்னை அதிகாரிகளின் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது.

-கையொப்பம்-
விவேக் ஜொஹ்ரி
2-5-2022

आज़ादी का अमृत महोत्सव

विवेक जौहरी
अध्यक्ष
Vivek Johri
Chairman



सत्यमेव जयते

भारत सरकार
वित्त मंत्रालय
राजस्व विभाग
केन्द्रीय अप्रत्यक्ष कर एवं सीमा शुल्क
नॉर्थ ब्लॉक, नई दिल्ली-110 001
Government of India
Ministry of Finance
Department of Revenue
Central Board of Indirect Taxes & Customs
North Block, New Delhi-110 001
Tel. : +91-11-23092849, Fax : +91-11-23092890
E-mail : vivekjohri.irs@gov.in

2nd May, 2022

## FOREWORD

I am delighted to see this compilation of the Frequently Asked Questions (FAQ) on E-invoice, brought out by the Central GST Zone of Tamil Nadu and Puducherry, Chennai, particularly in the vernacular language. With the reduction of the threshold limit for issue of mandatory e-Invoices by the taxpayers with turnover exceeding Rs. 20 Cr., w.e.f 01.04.2022, this booklet would certainly act as a ready reckoner for the trade at large.

2. Commercial transactions be it supply of goods/services or both, operate through invoices. With the evolution of modern technology such as distributed ledger technology, integrated data pipeline etc, manual mode of business has made way for an integrated digital ecosystem. This ensures secured data transmission amongst the stakeholders while making the supply chain easy for commercial establishments. It leaves a digital imprint for businesses to fall back on data if required and also leaves audit trail. Thus e-invoice has become an essential element in the modern-day business. In fact, the system of e-Invoicing would ensure ease of doing business as it enables smooth ITC reconciliations, simultaneous generation of EWB, leads to standardization & eliminates data entry errors and makes the tax compliance on real time basis.

3. I am sure that this compilation would be very handy in providing the clarifications to various issues that the tax payers may face during the preparation of e-invoice; and thereby would promote voluntary compliance to the new system.

4. The team of officers of GST Chennai deserve accolades for having compiled such a useful publication for the needs of the trade and industry in a lucid manner and particularly for also having it translated into Tamil for the larger benefit of the trade & industry of this region.

V Johri
2/5/2022
(Vivek Johri)

Azadi Ka Amrit Mahotsav

डी. पी. नागेन्द्र कुमार
विशेष सचिव एवं सदस्य

D. P. Nagendra Kumar
Special Secretary & Member

सत्यमेव जयते

भारत सरकार
वित्त मंत्रालय
राजस्व विभाग
केन्द्रीय अप्रत्यक्ष कर एवं सीमा शुल्क बोर्ड
नार्थ ब्लॉक, नई दिल्ली-११० ००१
Government of India
Ministry of Finance
Department of Revenue
Central Board of Indirect Taxes & Customs
North Block, New Delhi - 110 001
Tel. No.: +91-11-23092308, Fax No.: +91-11-23092568
E-mail : dp.nkumar@gov.in



**உறுப்பினரின் செய்தி**

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலம் இ-இன்வாய்ஸ் பற்றிய FAQ அதாவது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை தொகுத்து தமிழில் வெளியிடுவது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். 01.04.2022 முதல் இந்த இ-இன்வாய்ஸ் என்பது வருடத்திற்கு 20 கோடி ரூபாய்க்கு மேல் ஒட்டு மொத்த விற்பனையளவு உள்ள அனைவருக்கும் கட்டாயம் என்பதால் இந்த வெளியீடு மிகவும் அவசியமானதாகும்.

கடந்த சில வருடங்களில், மறைமுக வரி நிர்வாகத்தில், இன்வாய்ஸ் சம்பந்தமாக பல எளிமைகள் நடைமுறை படுத்தப்பட்டுள்ளன. இதில், கலால் வரி இன்வாய்சுக்கு பதிலாக வர்த்தகத்தின் இன்வாய்சயே வரி நிர்வாத்திற்கு ஏற்றவையாக அறிவித்ததும் ஒன்றாகும். தொழில் நுட்ப முன்னேற்றங்களினால், இ-இன்வாய்ஸ் முறையின் மூலம், CBIC, வர்த்தகத்தால் தயாரிக்கப்பட்ட வணிக இன்வாய்ஸில் உள்ள தரவு கூறுகளை ஏற்றுக்கொண்டு, ஜிஎஸ்டி ரிட்டர்ன்களைத் தாக்கல் செய்யத் தேவையான தரவுகளை தானாக நிரப்பும் வசதியை ஏற்படுத்தி உள்ளது.

இது தரவுகளின் சரிபார்ப்பை மேம்படுத்தி, ITC எடுத்தல், ஜிஎஸ்டி வரிவிவர படிவத்தை தாக்கல் செய்தல், இ-வே பில் தானாக உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் வர்த்தகத்திற்கான செயலாக்கச் செலவைக் குறைத்து வணிக செயல்திறனை மேம்படுத்தி எளிதாக வணிகம் செய்வதை உறுதி செய்கிறது.

இ-இன்வாய்ஸ் பற்றி அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் தொகுப்பு, குறிப்பாக தமிழில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இது ரூ.20 கோடிக்கு மேல் ஒட்டு மொத்த விற்பனையளவு உள்ள வர்த்தகம் மட்டுமன்றி, சிறு வணிகங்கள், MSME மற்றும் வளர விரும்பும் ஏற்றுமதியாளர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன.

இ-இன்வாய்ஸ் தொடர்பான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் அனைத்து அம்சங்களையும் ஒரு புத்தக வடிவில் தெளிவான முறையில் வெளிக்கொணறும் முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

-கையொப்பம்-
D.P. நாகேந்திர குமார்
2-5-2022

डी. पी. नागेन्द्र कुमार
विशेष सचिव एवं सदस्य
*D. P. Nagendra Kumar*
Special Secretary & Member

सत्यमेव जयते

भारत सरकार
वित्त मंत्रालय
राजस्व विभाग
केन्द्रीय अप्रत्यक्ष कर एवं सीमा शुल्क बोर्ड
नार्थ ब्लॉक, नई दिल्ली-११० ००१
Government of India
Ministry of Finance
Department of Revenue
Central Board of Indirect Taxes & Customs
North Block, New Delhi - 110 001
Tel. No.: +91-11-23092308, Fax No.: +91-11-23092568
E-mail : dp.nkumar@gov.in



## MEMBER'S MESSAGE

I am happy to note that the Central GST Zone of Tamil Nadu and Puducherry, Chennai, has complied Frequently Asked Questions (FAQ) on the subject of E-invoice under GST, which is very relevant in view of the fact that all the Taxpayers with turnover exceeding Rs. 20 Cr. are mandated to issue e-invoices with effect from 01.04.2022.

2. A number of measures have been taken over the years in the indirect tax administration to simplify this process of invoice preparation, including abolition of excise invoice and accepting the commercial invoice as document for the purpose of indirect tax. With technological advancements, CBIC under e-invoice is accepting the data elements in the commercial invoice prepared by the trade in the form of e-invoice from, which the data required to file GST returns are getting auto-populated. This enables smooth reconciliation of data for the purpose availing Input Tax Credit, filing of GST return, auto-generation of EWB etc. thereby reducing the processing cost for the trade and improving the overall business efficiency and ensure Ease of Doing business.

3. I am sure that this compilation of FAQs on E-invoice, published particularly in Tamil would be extremely useful not only for the trade and industry who have aggregate turnover of more than Rs.20 crore in any previous financial year in this Zone, but also for small businesses, MSME and exporters who aspire to grow and garner their share in the export market.

4. My best complements to the officers associated with the preparation of this FAQ for their earnest initiative to bring out all relevant aspects of e-invoice in a lucid manner in the form of single comprehensive book.

**(D.P. Nagendra Kumar)**

**New Delhi, 2nd May, 2022**



**Sandeep Kumar, I.R.S.**
**Member & Spl. Secretary**

सत्यमेव जयते

**Government of India**
**Ministry of Finance**
**Department of Revenue**
**Central Board of Indirect Taxes**
**& Customs, North Block**
**New Delhi-110 001.**

**<u>செய்தி</u>**

**01.04.2022 முதல், வருடாந்திர ஒட்டு மொத்த விற்பனையளவு ரூ.20 கோடியில் இருந்து ரூ. 50 கோடி வரை உள்ள ஜிஎஸ்டி வரி செலுத்துவோருக்கு இ-இன்வாய்ஸ் முறை அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதற்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை (FAQ) இருமொழி தொகுப்பாக வெளியிடுவதில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டல மத்திய வரித்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ள இந்த கடினமான முயற்சியை நான் பாராட்டுகிறேன்.**

**இ-இன்வாய்ஸ் அமைப்பு ஜிஎஸ்டி வரிக்கான ஐடிசியை முழு விநியோகச் சங்கிலியில் தடையற்று பெறவும் சீரான தரவுகளுக்கும் பெரும் பங்காற்றும். மேலும் இ-இன்வாய்ஸ் என்பது ஐடிசி மோசடிகளைக் குறைத்து நேர்மையற்ற நடைமுறைகளைக் கட்டுப்படுத்தி வரித்துறைக்கு உதவும் என்பதால், அதன் மூலம் ஒரு சமமான வாய்ப்பினை வழங்குவதன் மூலம் முறையான வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது.**

**இந்த இ-இன்வாய்ஸ் பற்றிய அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், வரி செலுத்துவோரின் விழிப்புணர்வை மேம்படுத்துவதில் பெரும்பங்காற்றும். இதை வெளிக்கொண்டு வந்த அதிகாரிகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.**

-கையொப்பம்-
சந்தீப் குமார்
2-5-2022



**Sandeep Kumar, I.R.S.**
**Member & Spl. Secretary**

सत्यमेव जयते

**Government of India**
**Ministry of Finance**
**Department of Revenue**
**Central Board of Indirect Taxes**
**& Customs, North Block**
**New Delhi-110 001.**

## Message

With e-invoicing being notified for taxpayers having annual aggregate turnover of more than Rs.20 crore to Rs. 50 Cr., with effect from 01.04.2022, I commend the painstaking effort of central tax officers of Tamil Nadu & Puducherry Zone for this bi-lingual publication of Frequently Asked Questions (FAQ) on e-Invoice under GST.

2. As the e-Invoice system will go a long way in reducing the data mismatch and provide seamless flow of Input Tax Credit (ITC) across the entire supply chain. Further, e-invoice will also help the department to curb unscrupulous practices and reduce ITC frauds, thereby encouraging legitimate trade by providing a level playing field.

3. My sincere appreciation for the officers of for having come out with this FAQs on e-invoicing, which will go a long way in improving taxpayer's knowledge.

Date: 2nd May, 2022.

Sd/- 02.05.2022

(**Sandeep Kumar**)

# பொருளடக்கம் / Table Of Contents
# இ-இன்வாய்ஸ் / e-invoice


அடிப்படைகள்
General ---------- 01

முறைக்குள் அடங்குபவைகள்
Applicability ---------- 18

IRP க்கு அறிக்கை செய்தல்
Reporting to IRP ---------- 40

ஸ்கீமா/ உள்ளடக்கம்
Schema / Contents ---------- 54

IRN உருவாக்கம்
Generation of IRN ---------- 79

IRN / QR குறியீடு அச்சிடுதல்
Printing of Invoice / IRN / QR Code ---------- 83

IRN / QR குறியீட்டின் சரிபார்ப்பு
Verification of IRN / QR Code ---------- 90

பெறுநருக்கு அனுப்புதல்
Sending to Receiver ---------- 93

இ-வே பில் / ஜிஎஸ்டி விவர அறிக்கை (படிவம்) இணைப்பு/ தொடர்பு
Linkage with E-Way Bill / GST Return ---------- 102

ஆதாரங்கள், உதவி & கருத்து ---------- 119

Resources, Help & Feedback ---------- 120


*Note: Reference to CGST Act/ Rules, 2017 includes reference to the corresponding provisions of the SGST/UTGST/IGST Act/Rules, 2017, also.*


*Disclaimer: Please note that the subject guidance material is intended to provide general understanding on the subject and it should not be treated as a legal advisory, opinion or authority. For more details, all the concerned are advised to refer to the respective legal provisions of CGST Act 2017/CGST Rules, 2017; Notifications issued thereunder and Circulars of the CBIC*

# இ-இன்வாய்ஸ் - அடிப்படைகள்

## e-invoice - General

## Q.NO. 1.

### 'இ -இன்வாய்ஸிங்' என்றால் என்ன?

"இ - இன்வாய்ஸ் என்பது CGST 2017 விதி 48(4) இன்படி, பதிவுபெற்ற நபர்களின் அறிவிக்கப்பட்ட வகுப்பினர், இன்வாய்ஸ் பதிவு போர்ட்டலில் (IRP) படிவம் GST INV-01-இல் குறிப்பிட்ட விவரங்களை பதிவேற்றுவதன் மூலம் இன்வாய்ஸ் குறிப்பு எண் (IRN) மற்றும் QR-Code- ஐ பெற்று இன்வாய்ஸ் தயரிக்கும் முறையை குறிக்கிறது.

பொருள்/சேவையெய் வாங்குபவருக்கு அறிவிக்கப்பட்ட சப்ளையரால் வழங்கப்படும் IRN- ன் உட்பொதிக்கப்பட்ட QR குறியீட்டைக் கொண்ட இன்வாய்ஸ் (IRN-ஐ தனித்தனியாக குறிப்பிடுவது அவரவர் விருப்பமானது), பொதுவாக GST- யில் "இ - இன்வாய்ஸ் ' என்று குறிப்பிடப்படுகிறது.

'இ-இன்வாய்ஸ்' என்பது அரசாங்க போர்ட்டலில் இன்வாய்ஸ் உருவாக்குவதையோ அல்லது PDF படிவத்தில் இன்வாய்ஸ் உருவாக்குவதையோ குறிப்பது இல்லை என்பதை நினைவில் கொள்ளவும்.

### What is 'e-invoicing'?

*As per Rule 48(4) of CGST Rules, notified class of registered persons shall prepare an invoice by incorporating the Invoice Reference Number (IRN) and the QR-Code generated by uploading specified particulars in FORM: GST INV-01 on Invoice Registration Portal (IRP).*

*Such invoice containing, inter alia, the QR Code embedded with IRN (mentioning IRN separately, is optional), issued by the notified supplier to buyer is commonly referred to as **'e-invoice'** in GST.*

*Please note that 'e-invoice' doesn't mean generation of invoice on a Government portal or issue of invoice in pdf form.*

## *Q.NO. 2.*


*தற்போதைய அமைப்பிலிருந்து ' இ-இன்வாய்ஸிங் ' எவ்வாறு வேறுபடுகிறது?*

*உண்மையில் இ - இன்வாய்ஸுக்கும் சாதாரண இன்வாய்ஸுக்கும் இடையே அதிக வித்தியாசம் இல்லை.*

*பதிவு பெற்ற நபர்கள் தங்களுடைய சொந்தகணக்கியல்/ பில்லிங்/ ERP சிஸ்டம்-களில் தொடர்ந்து தங்கள் GST இன்வாய்ஸ்களை உருவாக்குவார்கள். ஆனால் இ-இன்வாய்ஸ் என்பது IRP-ல் முன்பே உருவாக்கப்பட்ட IRN-ன் உட்பொதிக்கப்பட்ட QR குறியீட்டைக் கொண்டிருக்கும் (IRN-ஐ தனித்தனியாக குறிப்பிடுவது, விருப்பமானது). வார்த்தைகளில் கூறுவதானால், IRP-யில் **இன்வாய்ஸின்** உள்ளடக்கங்களை முதலில் படிவம்: GST INV-01-இல் தெரிவிக்கப்பட வேண்டும், இது ஒரு QR குறியீட்டுடன் தனித்துவமான IRN ஐ உருவாக்கும். இ-இன்வாய்ஸ் என்பது IRN-ன் உட்பொதிக்கப்பட்ட QR குறியீட்டுடன் சேர்த்து, சப்ளையரால் பொருட்கள் / சேவைகளைப் பெறுபவருக்கு வழங்கப்படும் இன்வாய்ஸைத் தவிர வேறொன்றுமில்லை.*

*அறிவிக்கப்பட்ட சப்ளையரால் வழங்கப்பட்ட GST இன்வாய்ஸ், IRPயில் உருவாக்கப்பட்ட IRN / QR-குறியீட்டுடன் மட்டுமே செல்லுபடியாகும்.*

*பின்வரும் விளக்கப்படம் இ-இன்வாய்ஸ் உருவாக்கும் செயல்முறையைக் குறிக்கிறது:-*




*மேலும் விரிவான செயல்முறைக்கு, தயவு செய்து* [https://einvoice1.gst.gov.in/](https://einvoice1.gst.gov.in/) *பகுதியைக் காணவும்.*


## *How is 'e -invoicing' different from present system (normal invoice)?*

*There is no much difference between the e-invoice and a normal invoice.*

*In the e-invoice system, the notified registered persons will continue to create their GST invoices on their own Accounting/Billing/ERP Systems, but it shall bear the QR Code embedded with IRN (mentioning IRN separately, is optional), pre-generated on IRP. In other words, the specified contents of the invoices will have to be first posted in FORM: GST INV-01 on IRP, to generate the said unique IRN with a QR Code. e-Invoice is nothing but an invoice issued to the receiver of goods/services by the supplier along with the QR Code.*

*A GST invoice issued by the notified supplier will be valid only with a valid IRN/QR-code.*

*The following flow chart indicates the process of generation of e-Invoice: -*




*For more detailed process, please go through* ***https://einvoice1.gst.gov.in/***

## ***Q.NO. 3.***

### *எந்த வணிகங்களுக்கு, இ-இன்வாய்ஸ் கட்டாயம்?*

*பதிவு பெற்ற நபர்களுக்கு, 2017-18 ஆம் ஆண்டிலிருந்து எந்தவொரு முந்தைய நிதியாண்டிலும் நிர்ணயிக்கப்பட்ட வரம்பை விட (பான் அடிப்படையில்) ஒட்டு மொத்த விற்பனையளவு (**சம்பந்தப்பட்ட** அறிவிப்பின்படி) அதிகமாக உள்ளதோ, அவர்களுக்கு இ-இன்வாய்**ஸி**ங் கட்டாயமாகும்.*

*பதிவுசெய்யப்பட்ட வெவ்வேறு வகுப்பினருக்கு இ-இன்வாய்ஸ் கட்டாயமாக அரசு ஆணைகளில் அறிவிக்கப்பட்ட தேதி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:*

| பதிவு செய்யப்பட்ட நபர்களின் வகுப்பு (ஒட்டுமொத்த விற்பனைஅளவு ) | நடைமுறைக்கு வந்த தேதி | அறிக்கை எண் (மைய வரி) |
|---|---|---|
| ரூ.500 கோடிக்கு மேல் | 01.10.2020 | 61/2020 dt. 30.07.2020 |
| ரூ.100 கோடிக்கு மேல் | 01.01.2021 | 88/2020 dt. 10.11.2020 |
| ரூ.50 கோடிக்கு மேல் | 01.04.2021 | 5/2021 dt. 08.03.2021 |
| ரூ.20 கோடிக்கு மேல் | 01.04.2022 | 1/2022 dt. 24.02.2022 |

## *For which businesses, e-invoicing is mandatory?*

*e-invoicing is mandatory for the class of Registered Persons whose aggregate turnover (based on PAN) is* ***more than the prescribed limit*** *(as per relevant notification) in any preceding financial year from 2017-18 onwards.*

*The effective date from which the e-Invoice was notified as mandatory for different class of Registered Persons is indicated hereunder:*

| Class of Registered Persons (with aggregate turnover) | Effective Date | Notification No (CT) |
|---|---|---|
| Exceeding Rs. 500 Crores | 01.10.2020 | 61/2020 Dated 30.07.2020 |
| Exceeding Rs.100 Crores | 01.01.2021 | 88/2020 Dated 10.11.2020 |
| Exceeding Rs.50 Crores | 01.04.2021 | 05/2021 Dated 08.03.2021 |
| Exceeding Rs.20 Crores | 01.04.2022 | 01/2022 Dated 24.02.2022 |

## Q.NO. 4.

### *இ -இன்வாய்ஸை நிர்வகிக்கும் சட்ட விதிகள் என்ன?*

*இ-இன்வாய்ஸ் தொடர்பாக பின்வரும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன:*

| அறிக்கை எண் (மைய வரி) | முக்கிய உள்ளடக்கங்கள் |
|---|---|
| 68/2019 Dt. 13-12-2019 | மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (எட்டாவது திருத்தம்) மூலம் CGST விதிகள், 2017 இன் விதி 48 இல் கீழேஉள்ள புதிய துணை விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன:<br>4. கவுன்சிலின் பரிந்துரைகளின் பேரில், அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட நபர்களின் வகுப்பினால், இ-இன்வாய்ஸ் தயாரிக்கப்படும். இது படிவம் GST INV-01 இல் உள்ள குறிபிட்டவிவரங்கள் உட்பட அதில் உள்ள தகவலைப் பதிவேற்றுவதன் மூலம் இ-இன்வாய்ஸ் குறிப்பு எண் பொது சரக்கு மற்றும் சேவை வரி எலக்ட்ரானிக் போர்டல் மூலம் பெறப்பட்டு அத்தகைய முறையில் மற்றும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்படும்.<br>5. துணை விதி (4) பொருந்தும் நபரால் மேற்கூறிய துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறையைத்தவிர வேறு எந்த வகையிலும் வழங்கப்படும் ஒவ்வொரு இன்வாய்ஸும்', இன்வாய்ஸ்-ஆக கருதப் படாது. |

| | |
|---|---|
| | 6. துணை விதி (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் தயாரிக்கப்பட்ட இன்வாய்ஸ்-க்கு துணை விதிகளின் (1) மற்றும் (2) விதிகள் பொருந்தாது. |
| 69/2019 Dt. 13-12-2019 | விதி 48 (4) இன் படி இ-இன்வாய்ஸ் தயாரிக்கும் நோக்கத்திற்காக 10 பொதுவான சரக்கு மற்றும் சேவை வரி மின்னணு இணையதளங்கள் அறிவிக்கப்பட்டது |
| 70/2019 Dt. 13-12-2019 | அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர், ஒரு நிதியாண்டில் ஒட்டு மொத்த விற்பனையளவு நூறு கோடி ரூபாய்க்கு மேல் இருப்பின், பதிவு செய்யப்பட்ட நபரின் வகுப்பாக அறிவிப்பு குறித்த விதிகளின் 48வது விதியின் துணை விதி (4) ன் அடிப்படையில் தயாரிக்கவும் (பதிவு செய்யப்பட்ட நபருக்கு பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்கும் போது); இ-இன்வாய்ஸ் தயாரிக்க வேண்டும். அறிவிப்பு ஏப்ரல் 1, 2020 முதல் அமலுக்கு வருகிறது<br>(இந்த அறிவிப்பு அறிக்கை எண் **13 of 2020 Dt. 21-3-2020)** ஆல் மாற்றப்பட்டது) |

| | |
|---|---|
| 2 of 2020 Dt. 1-1-2020 | இ-இன்வாய்ஸ் படிவமாக ஜிஎஸ்டி ஐஎன்வி-1 படிவம் மாற்றப்பட்டது (அறிவிப்பு 60/2020 Dt. 30-7-2020 இன் படி படிவம் மேலும் திருத்தப்பட்டது) |
| 13 of 2020 Dt. 21-3-2020 (in supersession of 70/2019 Dt. 13-12-2019) | இ -இன்வாய்ஸிங் அக்டோபர் 1, 2020 முதல் தொடங்கும், பதிவு செய்யப்பட்ட நபர்களால் துணை விதிகள். 54 இன் (2), (3), (4) மற்றும் (4A), குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை தவிர எவருக்கு ஒரு நிதியாண்டில் ஒட்டு மொத்த விற்பனையளவு ரூ 100 கோடிக்கு மேல் கடந்தால் இவர்கள் இ-இன்வாய்ஸ் மற்றும் பிற பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்கள், CGST விதிகள், 2017 இன் விதி 48 இன் துணை விதி (4) இன் அடிப்படையில், (பதிவு செய்யப்பட்ட நபருக்கு பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்கும் போது). (61/2020 டிடி. 30-7-2020 ஆல் மேலும் திருத்தப்பட்டது) |
| 60/2020 Dt. 30-7-2020 | மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (ஒன்பதாவது திருத்தம்) விதிகள், 2020 GST INV-01 க்கு மாற்றாக புதிய படிவம் (அதாவது இ-இன்வாய்ஸ்-கான அறிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட திட்டம்/ வடிவம்) |
| 61/2020 Dt. 30-7-2020 | ➢ திருத்தப்பட்ட அறிவிப்பு 13/2020 Dt. 21-3-2020<br>➢ சிறப்புப் பொருளாதார மண்டல அலகுகளும் இ-இன்வாய்ஸ் ஆணையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன |

| | |
|---|---|
| | ➢ பதிவு செய்யப்பட்ட நபர்களின் ஒட்டு மொத்த விற்பனையளவு (விதி 48(4) இன் அடிப்படையில்இ-இன்வாய்ஸ்தயாரிக்கத் தேவை) ரூ. 500 கோடியாக உயர்த்த பட்டது. |
| 70/2020 Dt. 30-9-2020 | ➢ அறிக்கை 13/2020 13/2020 Dt. 21-3-2020 அறிவிப்பில் "ஒரு நிதியாண்டு" என்ற வார்த்தைகள். "2017-18 முதல் எந்த முந்தைய நிதியாண்டிலும்" என மாற்றப்பட்டது<br>➢ ஏற்றுமதிக்கான இன்வாய்ஸ்களும் சேர்க்கப்பட்டுள்ளன |
| 72/2020 Dt. 30-9-2020 | விதி 46 இல், உட்பிரிவு (q) க்குப்பிறகு, கீழே உள்ள உட்பிரிவு சேர்க்கப்பட்டது: “(r) இ-இன்வாய்ஸ் விதி 48 (4) ன் கீழ் வழங்கப்பட்டிருந்தால்<br>QR குறியீடு, அதில் உட்பொதிக்கப்பட்ட இ-இன்வாய்ஸ் குறிப்பு எண் (IRN) உடன், துணை விதியின் கீழ் குறிப்பிட பரிந்துரைக்கப்பட்டது.<br><br>விதி 48 இல், துணை விதி (4) ல் பின்வரும் ப்ரொவிஸோ சேர்க்கப்பட்டது: “கமிஷனர், கவுன்சிலின் பரிந்துரைகளின் பேரில், அறிவிப்பின் மூலம், ஒரு நபர் அல்லது பதிவு செய்யப்பட்ட நபர்களின் வகுப்பிற்கு இதன் கீழ் இ-இன்வாய்ஸ் வழங்குவதில்இருந்து விலக்கு அளிக்கலாம். இது அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது.<br>விதி 138A இல், துணை விதி (2) கு, கீழே உள்ள துணை விதியால் மாற்றப்பட்டது: |

| | |
|---|---|
| | "(2) விதி 48ன் துணை விதி (4)ன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட முறையில் இ-இன்வாய்ஸ் வழங்கப்பட்டால், IRN உட்பொதிக்கப்பட்ட விரைவு குறிப்பு (QR) குறியீடு, அத்தகைய வரி இ-இன்வாய்ஸ் நகலுக்குப் பதிலாக முறையான அதிகாரியின் சரிபார்ப்புக்காக வழங்கலாம்." |
| 73/2020 Dt. 01.10.2020 | 01.10.2020 - 31.10.2020 காலப் பகுதியை வழங்குவதற்காக வரி செலுத்துவோருக்கான சிறப்பு நடைமுறை அறிவிக்கப்பட்டது– |
| 88/2020 Dt. 10.11.2020 | 01 ஜனவரி 2021 முதல் 100 கோடி ரூபாய்க்கு மேலான ஒட்டு மொத்த விற்பனையளவு கொண்ட வரி செலுத்துவோருக்கு இ-இன்வாய்ஸ் முறையை செயல்படுத்த |
| 05/2021 Dt. 08.03.2021 | 01 -4- 2021 முதல் 50 கோடி ரூபாய்க்குமேலான ஒட்டு மொத்த விற்பனையளவு கொண்ட வரி செலுத்துவோருக்குஇ-இன்வாய்ஸ் செயல்படுத்த |
| 23/2021 Dt. 01.06.2021 | அரசாங்க்க துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இ-இன்வாய்ஸ் ஆணையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன |

| | |
|---|---|
| 01/2022 Dt. 24.2.2022 | 01 -4- 2022 முதல் 20 கோடி ரூபாய்க்கு மேலான ஒட்டு மொத்த விற்பனையளவு கொண்ட வரி செலுத்துவோருக்கு இ-இன்வாய்ஸ் செயல்படுத்த |

## *What are the legal provisions governing e-invoice?*

*The following Notifications provide the legal basis for e-invoice:*

| Notification No.(CT) | Key Contents |
|---|---|
| *68/2019 Dt. 13-12-2019* | The following **new sub-rules were inserted in the Rule 48 of CGST Rules, 2017**, vide Central Goods and Services Tax (Eighth Amendment) Rules, 2019<br>The invoice shall be prepared by such class of registered persons as may be notified by the Government, on the recommendations of the Council, by including such particulars contained in FORM GST INV-01 after obtaining an Invoice Reference Number by uploading information contained therein on the Common Goods and Services Tax Electronic Portal in such manner and subject to such conditions and restrictions as may be specified in the notification.<br>Every invoice issued by a person to whom sub-rule (4) applies in any manner other than the manner specified in the said sub-rule shall not be treated as an invoice.<br>(6) The provisions of sub-rules (1) and (2) shall not apply to an invoice prepared in the manner specified in sub-rule (4). |
| *69/2019 Dt. 13-12-2019* | Notified 10 Common Goods and Services Tax Electronic Portals for the purpose of preparation of invoice in terms of Rule 48(4) CGST, 2017. |
| *70/2019- Dt. 13-12-2019* | Notified registered person, whose aggregate turnover in a financial year exceeds one hundred crore rupees, as a class of registered person who shall prepare invoice in terms of sub-rule(4) of rule 48 of the said rules in respect of supply of goods or services or both to a registered person. This notification to come into force from 01.02. 2020. |

| | |
|---|---|
| | *(Notification). No: 70/2019 Dt. 13-12-2019 was superseded by Notification: 13 of 2020 Dt. 21-3-2020)* |
| *2 of 2020 Dt. 1-1-2020* | Substituted Form GST INV-1 as e-invoice schema (Schema further amended vide Notification 60/2020 Dt. 30-7-2020) |
| *13 of 2020 Dt. 21-3-2020 (in supersession of 70/2019 Dt. 13-12-2019)* | e-invoicing to commence from the 1st October, 2020; Notified registered persons, other than those referred to in sub-rules (2), (3), (4) and (4A) of rule 54 of the said rules, whose aggregate turnover in a financial year exceeds Rs.100 Cr., as a class of registered person who shall prepare invoice and other prescribed documents, in terms of sub-rule (4) of rule 48 of CGCT Rules, 2017, in respect of supply of goods or services or both to a registered person.<br>***(Further amended vide Notification. No: 61/2020 Dt. 30-7-2020)*** |
| *60/2020 Dt. 30-7-2020* | Central Goods and Services Tax (Ninth Amendment) Rules, 2020<br>New form substituted for GST INV-01 (i.e. notified revised format for e-invoice) |
| *61/2020 Dt. 30-7-2020* | ➢ Amended notification 13/2020 Dt. 21-3-2020<br>➢ Special Economic Zone units also excluded from e-invoicing mandate<br>➢ Aggregate Turnover of registered persons (required to prepare invoice in terms of Rule 48(4)) enhanced to Rs. 500 Cr. |
| *70/2020 Dt. 30-9-2020* | ➢ The words “a financial year” in notification 13/2020 Dt. 21-3-2020 substituted with “any preceding financial year from 2017-18 onwards”<br>➢ Invoices for exports were also included. |
| *72/2020 Dt. 30-9-2020* | In rule 46, after clause (q), the following clause was inserted:<br>“(r) Quick Reference code, having embedded Invoice Reference Number (IRN) in it, in case invoice has been issued in the manner prescribed under sub-rule (4) of rule 48.”<br>In rule 48, in sub-rule (4), the following proviso was |

| | |
|---|---|
| | inserted:<br>"Provided that the Commissioner may, on the recommendations of the Council, by notification, exempt a person or a class of registered persons from issuance of invoice under this sub-rule for a specified period, subject to such conditions and restrictions as may be specified in the said notification.<br>In rule 138A, for sub-rule (2), below sub-rule was substituted:<br>"(2) In case, invoice is issued in the manner prescribed under sub- rule (4) of rule 48, the Quick Reference (QR) code having an embedded Invoice Reference Number (IRN) in it, may be produced electronically, for verification by the proper officer in lieu of the physical copy of such tax invoice." |
| *73/2020 Dt. 01.10.2020* | Notified a special procedure for taxpayers for issuance of e-Invoices for the period 01.10.2020 - 31.10.2020 |
| *88/2020 Dt. 10.11.2020* | To implement e-invoicing for the taxpayers having aggregate turnover exceeding Rs. 100 Cr w.e.f: 01.01.2021 |
| *05/2021 Dt. 08.03.2021* | To implement e-invoicing for the taxpayers having aggregate turnover exceeding Rs. 50 Cr w.e.f: 01.04. 2021 |
| *23/2021 Dt. 01.06.2021* | A government department, a local authority also excluded from e-invoicing mandate. |
| *01/2022 Dt. 24.2.2022* | To implement e-invoicing for the taxpayers having aggregate turnover exceeding Rs. 20 Cr from 01.04.2022. |

## Q.NO. 5.

*வணிகங்களுக்கான இ-இன்வாய்ஸின் நன்மைகள் என்ன?*

*GST ரிட்டர்ன்களில் இன்வாய்ஸ்-களை தானாக பதிவேற்றம் செய்வதன் மூலம்;*

- *எளிதான ITC சரி பார்ப்புக்கு உதவுதல்;*
- *ஒரே நேரத்தில் இ-வேபில் தானாக உருவாக்குதல்;*
- *மிகுந்த நம்பகத்தன்மை (உண்மைத்தன்மையை சந்தேகிக்கத் தேவையில்லை - போலி இன்வாய்ஸ்-களை நீக்குதல்);*
- *பரிவர்த்தனை செய்யும் தரப்பினரிடையே பிழைகள் /முரண்களை குறைத்தல்;*
- *தரநிலைப்படுத்தல் மற்றும் தகவல் பிழைகளை குறைத்தல்:.*
- *ஆவணங்களை real time அடிப்படையில் வரி இணக்கமானதாக மாற்றுதல்;*
- *செயலாக்கச் செலவுகளைக் குறைத்தல்;*
- *கட்டணச் சுழற்சிகளை மேம்படுத்துதல் என வணிகங்களுக்கு இ-இன்வாய்ஸ் பல நன்மைகளைச் செய்வதன் மூலம் ஒட்டுமொத்த வணிகத்திறனை பெரிதும் மேம்படுத்தும்.*

## What are the advantages of e-invoice for businesses?

*e-invoice has many advantages for businesses such as:*

- *Smooth ITC reconciliation by Auto-reporting of invoices into GST return;*
- *Simultaneous generation of EWB*
- *Utmost reliability (no need to doubt the genuineness- eliminates fake invoices);*
- *Reconciliation problems are eliminated;*
- *Standardisation & eliminates data entry errors;*
- *Documents become tax compliant on real time basis;*
- *Reduction of processing costs;*
- *improve payment cycles;*

- *thereby greatly improving overall business efficiency and ensure Ease of doing business.*

## Q.NO. 6.

*இ-இன்வாய்ஸ்க்கு தயாராக இருக்க வணிகங்கள் என்ன செய்யவேண்டும்?*

*வணிகங்கள் இப்போது செய்வது போல் இன்வாய்ஸ்களை வழங்குவதைத் தொடரும். இ-இன்வாய்ஸ் முறைக்குத் தேவையான மாற்றங்கள் (அதாவது IRP க்கு இன்வாய்ஸ்களைப் அளிப்பது மற்றும் IRN ஐப் பெறுவது), ERP/ கணக்கியல் மற்றும் பில்லிங் மென்பொருள் வழங்குநர்களால், அந்தந்த மென்பொருளில் செய்யப்படும். இந்த வசதியுடன் மேம்படுத்தப்பட்ட நவீன மென்பொருள் பதிப்பை வணிகர்கள் பெறவேண்டும்.*

*What businesses need to do, to be e-invoice ready?*

*Businesses will continue to issue invoices as they are doing now. Necessary changes on account of e-invoicing requirement (i.e., to enable reporting of invoices to IRP and obtain IRN), will be made by ERP/Accounting and Billing Software providers in their respective software. They need to get the updated version having this facility*

## Q.NO. 7.

**பல பணியாளர்களுக்கான பல பயனர் உருவாக்கம் மற்றும் நிர்வாகி விருப்பத்தை (*Administrator option*) நாங்கள்** *வைத்துக்கொள்ள* **முடியுமா***?*

*ERP போன்ற மென் பொருட்கள் இல்லாத, வரி செலுத்துவோருக்காக NIC-ஆனது "NIC-GST- இ-இன்வாய்ஸ் தயாரிப்பு (ம ) பிரின்டிங்" (NIC-GST_Gepp)*

*என்ற எக்ஸஸ் அடிப்படையிலான கருவியை வெளியுட்டுள்ளது. இக்கருவி மூலம் வரி செலுத்துவோர் இன்வாய்ஸ் தரவுகளை பதிவேற்றி முக்கிய பயனர் துணைப் பயனர், கணக்குகளை / உருவாக்கி அந்தந்த பயனரின் மொபைல் எண்ணுடன் மேப் செய்து, GePP-On, GePp-Off மற்றும் மொத்த உருவாக்க கருவி (Bulk Generation Tool) மூலம் பயன்படுத்தலாம்.*

### *Can we have Multiple User Creation and administrator Option for Multiple Staff?*

*As you are aware National Informatics Centre (NIC) has released beta of version of 'NIC-GST e-invoice Preparing and Printing' (NIC-GePP) excel based Tool to assist the tax payers, who are not having the ERP solution, to enter invoice in web based form and print the e-invoice with QR code, after downloading the IRN from e-invoice portal. In this, main user can create sub user accounts with respective user's mobile number mapped to it and use with GePP-Online, GePP-Offline and Bulk generation tool.*

## ***Q.NO. 8.***

### வணிகங்கள் இப்போது இ-இன்வாய்ஸ்களை, ஜிஎஸ்டி போர்ட்டல் அல்லது இ-இன்வாய்ஸ் போர்டல் அல்லது IRN போர்டலில் உருவாக்க வேண்டுமா?

*அனைத்து அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கும் GST INV-01இல் குறிப்பிட்ட தகவலை IRP இல் இடுவதன் மூலம், மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி IRN & QR குறியீட்டை உருவாக்குவது என்பது கட்டாயமாகும்; வணிகங்கள் தங்கள் உள் அமைப்புகளில் இ-இன்வாய்ஸை தொடர்ந்து உருவாக்குவார்கள் - ERP அல்லது அவற்றின் கணக்கியல் / பில்லிங் அமைப்புகள் அல்லது வேறு ஏதேனும்*

*மென்பொருள் மூலம் IRN-ஐ பெற்று, QR- குறியீட்டுடன் இ-இன்வாய்ஸை உருவாக்கி பிரிண்ட் செய்து கொள்ளலாம்.*

*Will businesses now be required to generate e-invoices on the GST portal or the e-invoice portal or the IRN portal?*

*It is mandatory on the part of all notified registered persons to generate the IRN & QR code as detailed above, by posting the specified information in GST INV-01, on IRP; and they will continue to generate e-invoices on their internal systems, whether through ERP or their accounting / billing systems or any other application.*

# இ-இன்வாய்ஸ் முறைக்குள் அடங்குபவைகள்

## E-invoice - Applicability

## Q.NO. 9.

**தற்போது என்ன ஆவணங்கள் இ-இன்வாய்ஸ் முறையில் அடங்கும்?**

- இன்வாய்ஸ்கள்
- கடன் குறிப்புகள்(CDN)
- பற்று குறிப்புகள் (DBN)

போன்ற ஆவணங்கள் பதிவு பெற்ற நபர்களில் அறிவிக்கப்பட்ட வகுப்பினரால் சரக்குகள்/சேவைகளை பெறும் பிற பதிவுபெற்ற நபர்களுக்காக B2B அல்லது ஏற்றுமதியின் நோக்கத்திற்காக விநியோகிக்கப்படும் போது, தற்போது இ-இன்வாய்ஸிங் முறையின் கீழ் அடங்கும். "வழங்கல் பில்" இ-இன்வாய்ஸ் முறையின் கீழ் வராது. கிரெடிட் & டெபிட் குறிப்புகள் உள்ளடக்கப்பட்டாலும், குறிப்பு மற்றும் புரிதல் காரணத்திற்காக, இந்த முறை 'இ-இன்வாய்ஸிங்' என்று குறிப்பிடப்படுகிறது.

**What documents are presently covered under e-invoicing?**

A. Invoices

B. Credit Notes (CDN)

C. Debit Notes (DBN)

*when issued by notified class of registered persons, to another registered recipient of goods/services (B2B) or for the purpose of Exports, are currently covered under e-invoicing system. “Bill of supply” is not covered under the e-Invoice system.*

*Although Credit & Debit notes are also covered, for ease of reference and understanding,the system is referred as 'e-invoicing'.*

## Q.NO. 10.

*இன்வாய்ஸ்/ CDN/ DBN (அறிவிக்கப்பட்ட நபரால் IRPக்கு தெரிவிக்கப்பட* **வேண்டிய**), *IRN இல்லாமல் செல்லுபடியாகுமா?*

*CGST 2017, விதி 48(4) மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் படி, அறிவிக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட விவரங்களைப் படிவம் GST INV-01 இல் இன்வாய்ஸ் பதிவு போர்ட்டலில் பதிவேற்றி, இன்வாய்ஸ் குறிப்பு எண்ணைப் (IRN) பெற்ற பிறகு இன்வாய்ஸ் தயாரிக்கவேண்டும்.*

*விதி 48(5) இன் படி, விதி 48(4) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையைத்தவிர, அறிவிக்கப்பட்ட நபரால் வழங்கப்படும் எந்தவொரு இன்வாய்ஸ்யும், இன்வாய்ஸ்யாக கருதப்படாது.*

*எனவே, அறிவிக்கப்பட்ட நபரால் வழங்கப்பட்ட இன்வாய்ஸ் / CDN / DBN ஒரு IRN உடன் மட்டுமே சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் (உட்பொதிக்கப்பட்ட IRN கொண்ட QR-குறியீடு).*

*Is an invoice/CDN/DBN (required to be reported to IRP by notified person), valid without IRN?*

*As per Rule 48(4) of CGST Rules, 2017 and the notification issued thereunder, a notified person shall prepare invoice by uploading specified particulars in FORM GST INV-01 on Invoice Registration Portal and after obtaining Invoice Reference Number (IRN) and QR-code.*

*As per Rule 48(5) CGST Rules, 2017, any invoice issued by a notified person in any manner other than the manner specified in Rule 48(4), the same shall not be treated as an invoice.*

*Therefore, an invoice/CDN/DBN issued by notified person becomes legally valid only with an IRN (QR-code having an embedded IRN).*

## Q.NO. 11.

*இ-இன்வாய்ஸின் கீழ் தற்போது என்ன என்ன விநியோகங்கள் அடங்கும்?*

*அறிவிக்கப்பட்ட வரி செலுத்துவோர் மூலம் பதிவு பெற்ற வணிகங்களுக்கான விநியோகம் (B2B), SEZ களுக்கான விநியோகம் (வரி செலுத்தி/ வரி செலுத்தாமல்), ஏற்றுமதிகள் (வரி செலுத்தி/ செலுத்தாமல்), டீம்ட் ஏற்றுமதிகள், தற்போது இ-இன்வாய்ஸ் முறையின் கீழ்வருகிறது.*

*What supplies are presently covered under e-invoice?*

*Supplies to registered persons (B2B), Supplies to SEZs (with/without payment), Exports (with/without payment), Deemed Exports, by notified class of taxpayers are currently covered under e-invoicing.*

## Q.NO. 12.

*அறிவிக்கப்பட்ட நபர்களால் B2C விநியோகங்களும் (வணிக நிறுவனங்களின் நுகர்வோருக்கான விநியோகம்) இ-இன்வாய்ஸ் முறையில் நடைபெற வேண்டுமா?*

*இல்லை, தற்போது B2C இன்வாய்ஸ்கள் அறிவிக்கப்பட்ட நபர்களால் IPR-க்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியமில்லை, தற்போது பொருந்தாது/ அனுமதிக்கப்படவில்லை.*

*Can B2C (Business to Consumer) supplies also be reported by notified persons?*

*No. Reporting B2C invoices by notified persons is not applicable/allowed currently.*

## Q.NO. 13.

*NIL-வீதத்தை ஈர்க்கும் அல்லது முழுவிலக்கு அளிக்கப்பட்ட பொருட்களுக்குஇ-இன்வாய்ஸிங் பொருந்துமா?*

*இல்லை. NIL-வீதத்தை ஈர்க்கும் அல்லது முழு விலக்களிக்கப்பட்ட வழங்கல்களுக்கு, ஒரு "வழங்கல் பில்" பரிந்துரைக்கப்படுகிறது; வரி இன்வாய்ஸ் அல்ல. எனவே, அத்தகைய வழங்கல்கள் அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபரால் வழங்கப்பட்டாலும் கூட இ- இன்வாய்ஸ் கட்டாயமில்லை. இருப்பினும், CGST விதி 46 ஏ இன் கீழ் வழங்கப்பட்ட இன்வாய்ஸ் -கம்-பில், (வரிவிதிக்கத்தக்க மற்றும் விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டும்) பதிவுசெய்யப்பட்ட நபருக்கு வழங்கும்போது இ- இன்வாய்ஸ் கட்டாயமாகும்.*

*Is e-invoicing applicable for NIL-rated or wholly-exempt supplies?*

*No. For supplies attracting NIL-rate or those wholly-exempt, a “bill of supply” is prescribed; but not a tax invoice. Hence, e-Invoice is not mandatory even if such supplies are by the notified registered person. However, for an invoice-cum-Bill of supply issued under Rule 46A of CGST Rules, 2017 for supply of taxable as well as exempted goods or services or both to a registered person, e-Invoice is mandatory.*

## Q.NO. 14.

*நிதி/ வணிகக் கடன் குறிப்புகளும் IRPக்கு தெரிவிக்கப்படவேண்டுமா?*

*இல்லை. 2017 CGST/SGST சட்டத்தின் பிரிவு 34ன் கீழ், வழங்கப்பட்ட கிரெடிட் மற்றும் டெபிட் குறிப்புகள் மட்டுமே IRP-யில் தெரிவிக்கப்படவேண்டும் மற்றும் IRN/QR-குறியீட்டுடன் வழங்கப்படவேண்டும்.*

*Whether the financial/commercial credit notes also need to be reported to IRP?*

*No. It is only the credit and debit notes issued under Section 34 of CGST Act, 2017, shall be reported on IRP and are issued with IRN/QR-code.*

## Q.NO. 15.

*அறிவிக்கப்பட்ட நபர்களின் அரசாங்கத் துறைகளுக்கான விநியோகங்களுக்கு இ-இன்வாய்ஸிங் பொருந்துமா?*

*பதிவு பெற்ற நபருக்கு பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்கும்போது, அறிவிக்கப்பட்ட நபர்களுக்கு* ***இ-இன்வாய்ஸ்*** *கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

*எனவே, அரசாங்கத்துறை GST-யின் கீழ் எந்தப் பதிவும் பெறாத போது (அதாவது 'பதிவு செய்யப்பட்ட நபர்' அல்ல), இ-இன்வாய்ஸ்க்கான தேவை எழாது.*

*இருப்பினும், அரசு துறையிடம் GSTIN உள்ளது எனில் (பொருட்கள்/ சேவைகளை வழங்கும் நிறுவனம்/ TDS கழித்தல்) இ-இன்வாய்ஸில் பெறுநரின் GSTIN எனக் குறிப்பிடப் படவேண்டும்.*

*Whether e-invoicing is applicable for supplies by notified persons to Government Depatment / entity?*

*e-invoicing by notified persons is mandated for supplies of goods or services or both to a registered person.*

*Thus, where the Government Department/entity doesn't have any registration under GST (i.e. not a 'registered person'), e-invoicing is not required.*

*However, where the Government department/entity is having a GSTIN (as entity supplying goods/services/ deducting TDS), the same has to be mentioned as recipient GSTIN inthe e-invoice.*

## Q.NO. 16.

**ஒரே பான் எண்ணின் கீழ் இரண்டு வெவ்வேறு GSTIN-களுக்கு இடையேயான இன்வாய்ஸ்களுக்கு இ-இன்வாய்ஸிங் பொருந்துமா?**

ஆம், ஒரே PAN இன் கீழ் இரண்டு வெவ்வேறு GSTIN களுக்கு இடையிலான இன்வாய்ஸ்களுக்கு இ-இன்வாய்ஸிங் பொருந்தும். பதிவு செய்யப்பட்ட நபர்களால், அதே நிரந்தர கணக்கு எண் (PAN) உடன் பதிவு செய்யப்பட்ட நபர் உட்பட எந்தவொரு பதிவு செய்யப்பட்ட நபருக்கும் பொருட்கள் அல்லது சேவைகள் அல்லது இரண்டையும் வழங்கும்போது, அறிவிக்கப்பட்ட நபர்களால் இ-இன்வாய்ஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது

2017 CGST/SGST சட்டத்தின் பிரிவு 25(4)ன் படி, "ஒரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் அல்லது ஒன்றுக்குமேற்பட்ட மாநிலங்கள் அல்லது யூனியன் பிரதேசங்களில் ஒன்றுக்குமேற்பட்ட பதிவுகளைப் பெற்ற அல்லது பெறவேண்டிய நபர், ஒவ்வொரு பதிவைப் பொறுத்தமட்டிலும் இந்தச் சட்டத்தின் படி தனித்தனி நபர்களாகக் கருதப் படுவர்

**Whether e-invoicing is applicable for invoices between two different GSTINs under same PAN?**

*Yes, e-invoicing is applicable for invoices between two different GSTINs sunder same PAN. e-invoicing by notified persons is mandated for supplies of goods or services or both to any registered person, including a registered person with the same PAN. As per Section 25(4) of CGST Act, 2017, "A person who has obtained or is required to obtain more than one registration, whether in one State or Union territory or more than one State or Union territory shall, in respect of each such registration, be treated as distinct persons for the purposes of this Act".*

## Q.NO. 17.

*உயர் கடல் விற்பனை (High Sea Sale) மற்றும் பாண்டட் கிடங்கு விற்பனைக்கு, இ-இன்வாய்ஸிங் பொருந்துமா?*

*இல்லை. CGST/SGST சட்டத்தின் அட்டவணை III இன் படி, இந்த நடவடிக்கைகள்/ பரிவர்த்தனைகள் பொருட்கள் வழங்கல் அல்லது சேவைகள் வழங்கல் அல்ல.*

*For high sea sales and bonded warehouse sales, whether e -invoicing is applicable?*

*No. These activities/transactions are neither supply of goods nor a supply of services, as per Schedule III of CGST, Act, 2017.*

## Q.NO. 18.

*இறக்குமதி பரிவர்த்தனைகளுக்கு இ-இன்வாய்ஸிங் பொருந்துமா?*

*இறக்குமதி பரிவர்த்தனைகளுக்கு இ -இன்வாய்ஸ் பொருந்தாது.*

*Whether e-invoice is applicable for import transactions?*

*e-invoice is not applicable for import transactions.*

## Q.NO. 19.

*எந்தெந்த நிறுவனங்கள்/ துறைகளுக்கு, இ-இன்வாய்ஸ் பொருந்தாது / விலக்கு அளிக்கப்பட்டுள்ளது?*

*பின்வரும் பதிவுசெய்யப்பட்ட நபர்களினால் செய்யப்படும் வழங்கல்களுக்கு இ-இன்வாய்ஸ் பொருந்தகூடியதல்ல:*

- *சிறப்பு பொருளாதார மண்டல யூனிட்டுகள்/ தொழிற்சாலைகள்*
- *காப்பீட்டாளர்கள்;*

- *வங்கி அல்லா நிதி நிறுவனம் (NBFC) உட்பட வங்கி நிறுவனங்கள் அல்லது நிதி நிறுவனங்கள்;*
- *சரக்கு போக்குவரத்து நிறுவனம் (GTA) ஒரு சரக்கு வண்டியில் சாலை வழியாக பொருட்களை கொண்டு செல்வது தொடர்பான சேவைகளை வழங்கும்போது.;*
- *பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குபவர்கள்;*
- *மல்டிபிளக்ஸ் திரைகளில் திரைப்படங்களின் கண்காட்சிக்கு அனுமதித்தல் மூலம் சேவைகளை வழங்குபவர்கள்;*
- *ஆன்லைன் தகவல் தரவுத் தளம் மற்றும் மீட்டெடுத்தல் சேவைகள் (OIDAR) CGST விதிகளின் விதி 14 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நபர்கள்;*
- *அரசாங்க துறை மற்றும் உள்ளாட்சி அதிகார அமைப்புகள்.*

## *For which entities/sectors, e-invoicing is not applicable / exempt?*

*E-Invoice is not applicable to the supplies made by the following registered persons:*

- *Special Economic Zone Units;*
- *Insurers;*
- *Banking companies or financial institutions, including a non-banking financialcompany (NBFC);*
- *Goods Transport Agency (GTA) supplying services in relation to transportation of goods by road in a goods carriage;*
- *Suppliers of passenger transportation service;*
- *Suppliers of services by way of admission to exhibition of cinematograph films in multiplex screens;*
- ***Persons registered in terms of Rule 14 of CGST Rules, 2017, Online Information Data base and Retrieval Services (OIDAR);***

- *Government department and local authority.*

## Q.NO. 20.

*இ-இன்வாய்ஸில் இருந்து விலக்கு என்பது சப்ளை/ பரிவர்த்தனையின் தன்மையாலா அல்லது அந்த நிறுவனத்தினாலா?*

*இது நிறுவனத்தைப் பொறுத்ததாகும்.*

*The exemption from e-invoicing is w.r.t the nature of supply/transaction or w.r.t the entity?*

*It is with respect to the entity.*

## Q.NO. 21.

*SEZ டெவலப்பர்கள் இ-இன்வாய்ஸ்களை வழங்கவேண்டுமா?*

*ஆம், SEZ டெவலப்பர்கள் குறிப்பிட்ட வருடாந்தர விற்பனையளவு மற்றும் அறிவிப்பின் பிற நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் இ- இன்வாய்ஸ்களை வழங்க வேண்டும்.*

*அறிவிப்பின் அடிப்படையில் (மத்திய வரி) 61/2020 dt. 30-7-2020, SEZ யூனிட்டுகளின் வெளி விநியோகத்திற்க்கு மட்டுமே இ-இன்வாய்ஸ் வழங்குவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

*Do SEZ Developers need to issue e-invoices?*

*Yes, SEZ Developers need to issue e-invoices if they have the specified turnover and fulfilling other conditions of the notification.*

*In terms of Notification No: 61/2020-CT dt. 30.7.2020, only SEZ Units are exempted from issuing e-invoices.*

## Q.NO. 22.

*தடையற்ற வர்த்தகம் & கிடங்கு மண்டலங்கள் (FTWZ)இ-இன்வாய்ஸில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா?*

*ஆம். வெளிநாட்டு வர்த்தக கொள்கையின்படி, தடையற்ற வர்த்தகம் மற்றும் கிடங்கு மண்டலங்கள் (FTWZ), வர்த்தகம் மற்றும் கிடங்குகளில் கவனம் செலுத்தும் சிறப்பு பொருளாதார மண்டலங்களின் ஒரு சிறப்பு வகை மட்டுமே ஆகும். எனவே, மற்ற சிறப்பு பொருளாதார மண்டல அலகுகளைப் போலவே, தடையற்ற வர்த்தகம் மற்றும் சேமிப்புக் கிடங்கு மண்டல நிறுவனங்களும் இ-இன்வாய்ஸ் முறையில் இருந்து விலக்கு அளிக்கப்பபட்டுள்ளன.*

*Are Free Trade & Warehousing Zones (FTWZ) exempt from e-invoicing?*

*Yes. As per Foreign Trade Policy, Free Trade & Warehousing Zones (FTWZ) are only a special category of Special Economic Zones, with a focus on trading and warehousing. Hence, like any other Special Economic Zone Units, Free Trade & Warehousing Zones entities are exempted from e-invoice.*

## Q.NO. 23.

*'JSON' என்பது ஜாவா ஸ்கிரிப்ட் ஆப்ஜெக்ட் நோட்டேஷன். அமைப்புகள்/ இயந்திரங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்வதற்கும் தரவைப் பரிமாறிக் கொள்வதற்கும் பொதுவான மொழியாக இது கருதப்படலாம். ERP அல்லது கணக்கியல் மென்பொருள் அதை உருவாக்கும் என்பதால், வரி செலுத்துவோர் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. இந்த வடிவம் GST அமைப்பில் எல்லா தரவையும் GST அமைப்பிற்குத் தெரிவிக்கப் பயன்படுத்தப் படுகிறது.*

*What is the file format in which invoice has to be reported to IRP?*

*Invoice details in prescribed schema (INV-01) have to be reported to IRP in JSON format.*

*'JSON' stands for Java Script Object Notation. It can be thought of as a common languagefor systems/machines to communicate between each other and exchange data.*

*As the ERP or Accounting software will generate it, taxpayer need not worry about it. This format is also used in GST system for reporting all data to GST System.*

## Q.NO. 56.

### இ-இன்வாய்ஸ் படிவத்தில் உள்ள பல்வேறு வகையான புலங்கள் யாவை?

1. *'கட்டாயம்' எனக்குறிக்கப்பட்ட புலங்களுக்கான தரவு கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.*
2. *எந்த மதிப்பும் இல்லாத கட்டாய புலத்தை NIL என தெரிவிக்கலாம்.*
3. *'விரும்பினால்' எனக் குறிக்கப்பட்ட புலங்கள் நிரப்பப்படலாம் அல்லது நிரப்பப்படாமல் இருக்கலாம். இவற்றில் பல குறிப்பிட்ட வணிகங்களுக்கு (எ.கா. தொகுதி எண், பண்புக்கூறுகள் போன்றவை) மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு (எ.கா. ஏற்றுமதி, இ-வேபில் போன்றவை) பொருந்தும்.*
4. *படிவத்தில் சில புலங்கள் 'விருப்பம்' எனக் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்தப் பிரிவைத் தேர்ந்தெடுத்தால், சில புலங்கள் கட்டாயமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, 'இ-வேபில் விவரங்கள்' என்ற பிரிவு விருப்பத்தேர்வாகக் குறிக்கப் பட்டுள்ளது. ஆனால், இந்த பிரிவை தேர்வு செய்தால், புலம், 'போக்குவரத்து முறை' கட்டாயம்.*

### *What are the various types of fields in e-invoice schema?*

1. *Data for fields marked as 'Mandatory' have to be provided compulsorily.*
2. *A mandatory field not having any value can be reported as NIL.*

3. *Fields marked as 'Optional' may or may not be filled up. Many of these are relevant for specific businesses (e.g. Batch No., Attributes etc.) and to cater to specific scenarios (e.g. export, e-way bill etc.).*
4. *Some sections in the format are marked as 'Optional'. But, if this section is selected, some of the fields may be mandatory. For example, the section 'e-way Bill Details' is marked as optional. But, if this section is chosen, the field, 'Mode of Transportation' is mandatory.*

## Q.NO. 57.

### சப்ளையர் தங்கள் நிறுவனத்தின் லோகோவை இ-இன்வாய்ஸில் வைக்க முடியுமா?

*நிறுவனத்தின் லோகோ போன்ற வணிகத்திற்கு உள்பட்ட இன்வாய்ஸ் கூறுகள் இ-இன்வாய்ஸ் திட்டத்தின் பகுதியாக இல்லை.*

*IRP க்கு இ-இன்வாய்ஸ் விவரங்களைப் அளித்து, IRN பெறப்பட்டபிறகு, பெறுநருக்கு இ-இன்வாய்ஸ் வழங்கும் போது (எ.கா. PDF ஆக மாற்றுதல் மற்றும் காகித நகலாக அச்சிடுதல் அல்லது மின்னஞ்சல் வழியாக அனுப்புதல் போன்றவை), நிறுவனத்தின் லோகோவைச் பதிவுசெய்தல், கூடுதல் உரை போன்றவற்றை, இ-இன்வாய்ஸில் பதிவிடும் வகையில், ஒரு நிறுவனத்தின் கணக்கியல் மென்பொருளை அந்தந்த ஈஆர்பி/ பில்லிங்/ கணக்கியல் மென்பொருள் வழங்குநர்கள் மூலம் வடிவமைக்கலாம்.*

### *Can the supplier place their entity logo on e-invoice?*

*Elements of invoice which are internal to business, such as company logo/slogan etc. are not part of e-invoice format.*

*After reporting invoice details to IRP and receipt of IRN, at the time of issuing invoice to receiver (e.g. generating as PDF and printing as paper copy or forwarding via e-mailetc.), any further customization, i.e. insertion of company logo, additional text-like slogan etc., can be made by respective ERP/billing/accounting software providers.*

## Q.NO. 58.

**ஒரு இன்வாய்ஸில் தெரிவிக்கக்கூடிய அதிகபட்ச line item களின் எண்ணிக்கை என்ன?**

*தற்போது வரம்பு 1000 ஆகஉள்ளது. எதிர்காலத்தில் தேவையின் அடிப்படையில் இது அதிகரிக்க படலாம்.*

*What is the maximum number of line items which can be reported in an invoice?*

*The limit is kept at 1000, currently. It could be enhanced based on requirement, if any, in future.*

## Q.NO. 59.

*படிவம் GST INV-01, முகவரி மற்றும் பில்-டு-தரப்பினரின் பான் விவரங்களை இணைக்க உதவுகிறதா?*

*ஆம். GST INV-01, முகவரி மற்றும் பில் செய்யப்படுபவர் பான் விவரங்களை ஸ்கீமா/படிவத்தில் அதற்கென வழங்கப்பட்ட புலங்களில் குறிப்பிட இயலும்.*

*Whether the Form GST INV-01 provides for incorporating the address and bill-to party and their PAN details?*

*Yes. The GST INV-01 provides for incorporating the address and bill-to party and their PAN details in the placeholders/columns provided in the schema/format.*

## Q.NO. 60.

**இ-இன்வாய்ஸ் படிவத்தில், பிறகட்டணங்கள் (item level)' கீழ் உள்ள தொகை, வரிக்குரிய மதிப்பின் பகுதியாக இல்லை. இருப்பினும், இன்வாய்ஸில் காட்டப்படும் சிலகட்டணங்களுக்கு ஜிஎஸ்டி விதிக்கப்படும். அவற்றை எவ்வாறு குறிப்பிடுவது?**

*அத்தகைய பிற கட்டணங்கள் (வரி விதிக்கக் கூடியவை), எ.கா. சரக்கு, காப்பீடு, பேக்கிங் & ஃபார்வர்டிங் கட்டணங்கள் போன்றவை இன்வாய்ஸில் மேலும் ஒரு line item ஆக சேர்க்கலாம்.*

*In the e-invoice schema, the amount under 'other charges (item level)' is not part of taxable value. However, some charges to be shown in invoice are leviable to GST. How to mention them?*

*Such other charges (includable for the levy of Tax), e.g. freight, insurance, packing & forwarding charges etc. can be added as one more line item in the invoice.*

## Q.NO. 61.

**இன்வாய்ஸில் உள்ள** *வரி உருப்படிகளில் (line items)* **எதிர்மறை மதிப்புகளை** *(வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பிலிருந்து குறிப்பிட்ட அளவுகளைக் கழிப்பதற்கு எ.கா.* **குறைந்த** *அபராதம், கழிவு தொகை) காட்டுவது அனுமதிக்கப்படுமா?* **இன்வாய்ஸில்** *வரியை ஈர்க்காத அத்தகைய தொகைகளை* **எவ்வாறு குறிப்பது?**

*வரி உருப்படி விவரங்களில், அத்தகைய மதிப்புகள் 'பொருள் தள்ளுபடி தொகையில்' காட்டப்படலாம். 'தள்ளுபடி' என்பதால், அந்த தொகை தாமாகவே கழிக்கப்படும்.*

*Is it permissible to show negative values (for deducting certain amounts from the value of goods supplied Eg. underloading penalty, deductions etc.)*

*in line items in the invoice ? How to report the such amounts which do not attract Tax in the invoice?*

*In the line item details, such values can be shown in 'Item Discount Amount'. Being 'discount', the value is automatically treated as negative.*

## Q.NO. 62.

*தற்போதைய* **இன்வாய்ஸ்** *டெம்ப்ளேட் அனைத்து* **பொருட்கள்** *அல்லது சேவைகளுக்கு மொத்த தள்ளுபடியை வழங்குகிறது. இ-* **இன்வாய்** *ஸில் இது சாத்தியமா?*

*ஆம். உருப்படி மட்டத்தில் தள்ளுபடி மற்றும் இன்வாய்ஸ் மதிப்பில் மொத்த தள்ளுபடிகளை வழங்க ஒரு புலம் மற்றும் வழிமுறை உள்ளது.*

*The current e-invoice template provides for total discount for all the products or services. Will this be possible in the e-invoice?*

*Yes. There is a mechanism and placeholders to provide discounting on item level as well as total discounts on the invoice value.*

## Q.NO. 63.

**இன்வாய்** *ஸில்* **குறைக்கப்பட்ட மதிப்பைக்** *(abatement)* **காட்ட வேண்டும் இத்தகைய சூழ்நிலைகளில் எவ்வாறு குறிப்பிடுவது** *?*

*சில பொருட்கள் மதிப்புக்குறைப்புக்கு தகுதியானவை. எடுத்துக்காட்டாக, ரியல் எஸ்டேட்டில், ஒப்பந்த மதிப்பில் 67% மதிப்பிற்கு வரிவிதிக்கப்படும். அத்தகைய சூழ்நிலைகளில் இன்வாய்ஸ்களை குறிக்க, கீழே உள்ள தீர்வு பரிந்துரைக்கப்படுகிறது:*

*முன்_வரி_மதிப்பு = ரூ. 1,00,00,000*

*வரிக்குரிய_மதிப்பு = ரூ. 67,00,000*

*ஜிஎஸ்டி தொகை (@5%) = ரூ. 3,35,000/-*

*மற்ற கட்டணங்கள் (உருப்படிநிலை) = ரூ. 33,00,000 (மதிப்புக் குறைப்பு தொகை)*

*மொத்த இன்வாய்ஸ் மதிப்பு = ரூ. 1,03,35,000/-*

> *We need to show abated value in the invoice? How to report in such scenarios?*

*Some supplies are eligible for abatement on value. For example, in real estate, where thetaxable value is 67% of the agreement value.*

*To report invoices in such scenarios, below workaround is suggested:*

*Pre_Tax_Value = Rs. 1,00,00,000/-*

*Taxable_Value = Rs. 67,00,000 /*

*GST (@ 5%) = Rs. 3,35,000/-*

*Other Charges (item level) = Rs. 33,00,000 (Abatement Charges)*

*Total_Inv_Value = Rs. 1,03,35,000*

## Q.NO. 64.

> **எங்கள் வணிகத்தில், வரி வசூலிப்பதற்கு மதிப்பிடக் கூடிய/வரிவிதிக்கக் கூடிய மதிப்பில் *'அமார்டைசேஷன்* செலவு" சேர்க்கப்பட வேண்டிய சூழ்நிலைகள் உள்ளன. ஆனால் அது இன்வாய்ஸ் மதிப்பில் இருந்து கழிக்கப்பட வேண்டும் (அத்தகைய தொகை எதிர்தரப்பிலிருந்து திரும்பப் பெறப்படாது). இன்வாய்*ஸில்* இதை எவ்வாறு *குறிப்பிடுவது?***

*படிவத்தின் அடுத்த திருத்தத்தில் (INV-01) 'அமோர்டிசேஷன் செலவு'க்கான ஒரு தனிபுலம் உருவாக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.*

*ஒரு தீர்வாக, அத்தகைய வணிகங்கள், கீழே உள்ள எடுத்துக்காட்டில் காட்டப்பட்டுள்ளபடி, 'அமோர்டிசேஷன் செலவு' பற்றிக் குறிப்பிடலாம் (இங்கு அமோர்டிசேஷன் தொகை ரூ. 2176/-):*

*<u>பொருள்மட்டத்தில்மதிப்புகள்</u>:*

*முன்_வரி_மதிப்பு = ரூ. 25067.52*

*வரி_மதிப்பு = ரூ. 27243.52 (அடிப்படைமதிப்பு + அமோர்டைசேஷன் தொகை ரூ. 2176)*

*வரிவிகிதம் = 28 % IGST மதிப்பு = ரூ. 7628.19*

*<u>இன்வாய்ஸ் அளவில் மதிப்புகள்</u>:*

*Discount_Amt_Invoice_Level = ரூ. 2176/- (அமோர்டைசேஷன் தொகை)*

*மொத்த இன்வாய்ஸ் மதிப்பு = 32695.71 (27243.52 + 7628.19 - 2176)*

> *In our business, there are scenarios where 'amortization cost' needs to be included invoice value (as such amount is not to be recovered from the counter party). How to report this in the invoice?*

*Including a separate field/column for 'amortisation cost' will be examined in the next revision of schema (INV-01).*

*As a work around, such businesses may report 'amortised cost', as shown in below example (where amortised cost is Rs. 2176/-):*

***<u>Values at Item Level:</u>***

*Pre_tax_value = Rs. 25067.52*

*Taxable_value = Rs. 27243.52 (Base value + Amortised cost of Rs. 2176)*

*Tax Rate = 28 %*

*IGST Value = Rs. 7628.19*

***<u>Values at Invoice Level:</u>***

*Discount_Amt_Invoice_Level = Rs. 2176/- (Amortised cost)*

*Total Invoice Value = 32695.71 (27243.52 + 7628.19 - 2176)*

## Q.NO. 65.

**இ-இன்வாய்ஸ்** *படிவத்தில்,* **வருமான வரிச் சட்டம்**, **1961 இன் கீழ் சப்ளையர்களால்** *பிடித்தம் செய்யப் பட்ட TCS* (**மூலத்தில் வசூலிக்கப்படும் வரி) குறிப்பிடுவதற்கு** *புலம்* **இல்லை. என்னசெய்வது** ?

*தற்சமயம், படிவத்தில் தனி புலம் இல்லை. படிவத்தில் அதைச் சேர்ப்பது அடுத்த திருத்தத்தில் ஆராயப்படும்.*

*எவ்வாறாயினும், ஒரு தீர்வாக, "பிற கட்டணங்கள் (இன்வாய்ஸ்நிலையில்)" என்ற புலத்தை வரி விதிக்கக்கூடிய மதிப்பின் பகுதியாக இல்லாத TCS - ஐ குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தலாம்.*

*INV-01 படிவமானது குறிப்பிட்ட இ-இன்வாய்ஸ் விவரங்களை IRPக்கு அளிப்பதற்கு மட்டுமே. போர்ட்டலில் இருந்து IRN பெறப்பட்டவுடன், இன்வாய்ஸ் வழங்கும் போது வணிகமானது GSTக்கு சம்பந்தமில்லாத மற்ற கூறுகளைச் சேர்க்கலாம்.*

*In e-invoice schema, there is no placeholder for mentioning TCS (Tax Collected at Source) collected by suppliers under Income Tax Act, 1961. What to do?*

*At present, there is no separate field/column for TCS. Including it in format will be examined in next version.*

*However, as a work around, the field of "Other Charges (Invoice Level)" can be used to mention TCS where it doesn't form part of taxable value.*

*It may further be noted that the Form GST INV-01 is only to report specified invoice particulars to IRP. Once IRN is obtained from the portal, the business may add any other elements not relevant to GST, while issuing invoice finally to buyer.*

## Q.NO. 66.

**தற்போதைய** *படிவத்தில், GST* **யின் கீழ் வராத விநியோகங்களின் விவரங்களைக் குறிப்பிட எந்த ஏற்பாடும் இல்லை. எ.கா. ஒரு ஹோட்டல்** *B2B* **விநியோகத்திற்கான** *ஒரே* **இ-இன்வாய்ஸ் கொடுக்க விரும்புகிறது**. *அப்பட்டியலில்* **உணவு மற்றும் பானங்கள் (***GST* **- விதிக்கப்படும்) மற்றும் மது பானங்கள் (***GST* **க்கு வெளியே) ஆகியவை அடங்கும்** *எனில் எவ்வாறு குறிப்பிடுவது?*

*GST வரி விதிப்பை ஈர்க்காத பொருட்களுக்கு, அத்தகைய வணிக நிறுவனங்களால் தனி இன்வாய்ஸ் வழங்கப்படலாம்.*

*In the current schema, there is no provision to report details of supplies not covered under GST, e.g. a hotel wants to give single invoice for a B2B supply where the supply includes food and beverages (leviable to GST) and Alcoholic beverages (outside GST).*

*For supplies which do not attract GST levy, separate invoice may be issued by such business entities.*

## Q.NO. 67.

*இ-இன்வாய்ஸ் ஸ்கீமா/ படிவத்தில் ரிவர்ஸ் சார்ஜ் முறையை தெரிவிக்க இயலுமா?*

*ஆம். இ-இன்வாய்ஸ் படிவம் மூலம் ரிவர்ஸ் சார்ஜ் முறையையும் தெரிவிக்க இயலும்.*

*Will the e-invoice schema/format cater to reverse charge mechanism?*

*Yes. E-invoice system has a reverse charge mechanism reporting, as well.*

## Q.NO. 68.

**GST INV-01 படிவத்தில், ஒரு புலம் உள்ளது. 'சப்ளையர் மற்றும் பெறுநர் அதே மாநிலம்/யூடியில் இருந்தாலும் ஐஜிஎஸ்டி பொருந்தக் கூடியது/ இந்த புலத்தின் பொருத்தம்/பயன்பாடு என்ன?**

*28.05.2018 தேதியிட்ட ஜிஎஸ்டியை விதிக்கும் அறிவிப்பு எண். 11/2018-மத்தியவரி (விகிதம்) மூலம் அறிவிக்கப்பட்டது போன்ற, சப்ளையர் மற்றும் பெறுநர் ஒரே மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் இருந்தாலும், சப்ளையர் மற்றும் பெறுநர்களுக்கு IGSTக்கு கட்டணம் விதிக்கப்படும் சூழ்நிலைகளை குறிப்பிட இந்தப் புலம் உள்ளது. ரிவர்ஸ்சார்ஜ் அடிப்படையில் (அதாவது வாங்கும் வங்கி செலுத்த வேண்டிய வரி) முன்னுரிமைத்துறை கடன் சான்றிதழ்கள் வர்த்தகம் / விநியோகம் (PSLC) போன்றவற்றிற்கு இது பொருந்தும்.*

*08/03/2019 தேதியிட்ட 93/12/2019- GST சுற்றறிக்கை TRU (CBIC) வங்கிகளுக்கிடையேயான PSLCஇன் சப்ளையின் தன்மை, மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம் என்பது போல் கருதப்படலாம் என்றும், அதன்படி IGST செலுத்த வேண்டும் என்றும் தெளிவுபடுத்துகிறது*

*In INV-01 proforma, there is a field, "IGST Applicability despite Supplier and Recipient located in same State/UT". What is the relevance/applicability of this field?*

*This field is meant for reporting scenarios where the supply is chargeable to IGST despite the fact that the Supplier and Recipient are located within same State/UT, as in the case of the supplies covered by the Notification No. 11/2018-Central Tax (Rate) dated 28.05.2018 levying GST on supply/trading of Priority Sector Lending*

*Certificates (PSLCs) on reverse charge basis (i.e. the tax to be paid by the buyer bank).*

*The Circular No.93/12/209-GST dated 08/03/2029 issued by TRU ( CBIC ) clarifies that nature of supply of PSLC between banks may be treated as a supply of goods* ***in the course of inter-State trade or commerce*** *and accordingly IGST is payable.*

## Q.NO. 69.

*டெபிட் / கிரெடிட் நோட்டில் பல* **இன்வாய்**ஸுகளை *இணைப்பதற்கான வசதி இருக்குமா?*

*ஆம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்டபடி ஒரு டெபிட் / கிரெடிட் நோட்டில் பல இன்வாய்ஸுகளை இணைப்பதற்கான வசதி இருக்கும்.*

*Will there be an option for linking multiple invoices in case of debit note/ credit note?*

*Yes. There will be an option for linking multiple invoices to a debit / credit note as already permissible.*

## Q.NO. 70.

**கிரெடிட்நோட் மற்றும் டெபிட் நோட்டின் விஷயத்தில்**, **குறிப்பிடப்பட்ட இ-இன்வாய்ஸ்** *எண்ணுடன்* **ஏதேனும் சரி பார்ப்பு** *முறை* **உள்ளதா**?

*ஜி.எஸ்.டி.யின் திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில், இன்வாய்ஸுடன் சரிபார்ப்பு என்பது எதுவும் இல்லை.*

*In case of Credit Note and Debit Note, is there any validation w.r.t referred invoicenumber?*

*There is no linkage with any invoice required, in view of the amended provisions of GST.*

## Q.NO. 71.

**IRN ஐ உருவாக்க, சப்ளையர் மற்றும் பெறுநரின் GSTIN கள் GST அமைப்பில் செயல்பாட்டில் இருக்க வேண்டுமா?**

*ஆம், பிற பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அறிவிக்கப்பட்ட 'பதிவு செய்யப்பட்ட நபர்களால் விநியோகம் நடைபெறும் போது இ-இன்வாய்ஸிங் கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், சப்ளையர் மற்றும் பெறுநரின் GSTINகள் இ-இன்வாய்ஐ IRN - இல் தெரிவிக்கும் போது GST அமைப்பில் செயலில் இருக்க வேண்டும்.*

*For generating IRN, whether the GSTINs of supplier and recipient should be active on GST system?*

*Yes. As e-invoicing is mandated for notified registered persons to other 'registered persons', both the GSTINs of supplier and recipient shall be active in GST System, as on the date of document (Invoice/DBN/CDN) being reported.*

## Q.NO. 72.

**செல்லுபடியாகும் சில HSN கள் இ-இன்வாய்ஸ் போர்ட்டலால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை, *இதற்கான தீர்வு என்ன?***

*இயல்பான போக்கில் இத்தகைய நிலைமை எழுவதில்லை. சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் எந்த ஒரு HSN, ம் ஐ.ஆர்.பி.யில் கிடைக்கவில்லை / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், ஜிஎஸ்டி சுய சேவை போர்ட்டலில் GST Self-Service Portal. புகாரளிப்பதன்மூலம் இது தெரிவிக்கப்படலாம்.*

*மேலும், ஒரு HSN தேடல் வசதி GST அமைப்பில் எளிமைக்காக கிடைக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்: : https://services.gst.gov.in/services/searchhsnsac; மற்றும் ஒரு HSN மாஸ்டர் IRP-யில் வெளியிடப்பபட்டுள்ளது: https://einvoice1.gst.gov.in/Others/MasterCodes*

### *In case some HSNs which are otherwise valid are not accepted by e -invoice portal, what is the remedy?*

*In the normal course such situation does not arise. But in case, any HSN which is otherwise legally valid but is not available / not accepted onIRP, the same may be communicated by raising a ticket on* ***GST Self-Service Portal.***

*Further, it may be noted that a Search HSN facility is made available on GST System for ease of reference at :https://services.gst.gov.in/services/searchhsnsac ; and a HSN Master is also published on IRP: https://einvoice1.gst.gov.in/Others/MasterCodes, for ready reference.*

## *Q.NO. 73.*

### வர்த்தகர்கள், மருத்துவக் கடைகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்குத் தனித்தனி இ-இன்வாய்ஸ் படிவம் தேவைப்படுமா?

*இல்லை. அனைத்து வகையான வணிகங்களும் ஒரே இ-இன்வாய்ஸ் படிவத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்கீமாவில் கட்டாய மற்றும் கட்டாயமற்ற புலங்கள் உள்ளன. அனைத்து வரி செலுத்துபவர்களாலும் கட்டாய புலங்கள் நிரப்பப்பட வேண்டும். கட்டாயமற்ற புலங்களை தேர்வு செய்வது என்பது வணிகத் தேவையை பொருத்து அமையும். இந்த இ-இன்வாஸ் என்பது அனைத்து வணிகத் தேவைகளையும் கணக்கில்*

*கொண்டு வடிவமைக்கபட்டது. வணிகங்கள் அவரவர் சூழல் அமைப்புக்குக்கேற்ப தேவைப்படும் கட்டாயமற்ற புலங்களை தேர்வு செய்து நிரப்பலாம்.*

> *Will there be separate invoice formats required for Traders, Medical shops, Professionals and Contractors*

*No. The same e-invoice format will be used by all kinds of businesses. The proforma has mandatory and non-mandatory fields. Mandatory field has to be filled by all taxpayers. Non-mandatory field is for the business to choose. It covers all most all business needs and specific sectors of business may choose to use those non-mandatory field which are needed by them or their eco-system.*

## *Q.NO. 74.*

> **உருவாக்கப்படும் இ-இன்வாய்ஸ் எவ்வளவு காலம் அரசாங்க போர்ட்டலில் கிடைக்கும்** ?

*GST/NIC போர்ட்டலில் இ-இன்வாய்ஸ் உருவாக்கப்படவில்லை என்று மீண்டும் தெளிவுபடுத்தப்படுகிறது. இது விற்பனையாளரின் ERP அல்லது கணக்கியல்/பில்லிங் அமைப்பு அல்லது பிற மென்பொருள் கருவிகள் மூலமாக மட்டுமே உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். IRP- ல் உள்ள தரவுகள் (Data) 24 மணிநேரம் மட்டுமே சேமித்து வைக்கப்படும். ஆனால், ஒரு இன்வாஸுக்கு ஒரு முறை IRP உருவாக்கப்பட்டுவிட்டால், அதை 30 நாட்களுக்குள் இ-இன்வாஸ் வழங்க உபயோகப்படுத்தலாம்.*

> *How long will the e-invoice generated would be available at the Government portal?*

*It is reiterated that the e-invoice is not generated on the GST/NIC portal. It needs to be generated only on the supplier’s system (ERP or the accounting/ billing system / other software tools of the supplier) and can be saved for*

*future reference. As far as data on **IRP** is concerned, it will be available only for 24 hours.*

*However, it may be noted that the IRN once generated, it is valid for 30 days for use by the supplier to issue the e-Invoice.*

## Q.NO. 75.

*தரவு உள்ளீடு பிழைகளைக் குறைப்பதற்காக* **உள்ளிடப்பட்ட** *மூலதகவல்களின்* **அடிப்படையில் இ-இன்வாய்ஸ்** *படிவமான GST INV-01 இன் புலங்களை தானாக* **நிரப்புவது சாத்தியமா***?*

*இல்லை. உள்ளிடப்பட்ட மூலதகவல்களைக் கொண்டு இ-இன்வாய்ஸ் புலங்களைத் தானாக நிரப்புவது சாத்தியமில்லை.*

*ஆனால், அத்தகைய வசதியை சப்ளையரின் ERP அல்லது கணக்கியல் / பில்லிங் அமைப்பில் கட்டமைக்க முடியும். பெரும்பாலான கணக்கியல் / பில்லிங் மென்பொருளில் ' பொருள் மாஸ்டர்', 'சப்ளையர் மாஸ்டர்', 'வாங்குபவர் மாஸ்டர்' போன்ற பெயரில் அத்தகைய வசதி உள்ளது, இது தேவையை பூர்த்தி செய்யும், ஏனெனில் இன்வாய்ஸ் உருவாக்கம் சப்ளையரின் கணினியில் நிகழ்கிறது.*

*Is it possible to auto-populate fields of the e-invoice form GST INV-01, based on credentials entered in order to minimize data entry errors?*

*No. It is <u>not</u> possible to auto-populate fields of the e-invoice form GST INV-01.*

*However, such facility can be built into the ERP or accounting/billing system of the supplier. Most of the accounting/billing software have such facility in the name of 'item master', 'supplier master', 'buyer master' etc. which would meet the requirement, since the invoice generation happens on the system of the supplier.*

## Q.NO. 76.

**டிரான்ஸ்போர்ட்டர் விவரங்களையும் சேர்க்க முடியுமா?**

*ஆம். டிரான்ஸ்போர்ட்டர் விவரங்கள் உள்ளிடுவதற்கான புலங்கள் GST INV-01 இல் உள்ளன.*

*Will it be possible to add transporter details as well?*

*Yes. The transporter details can be entered in form GST INV-01 at the time of generation of E-invoice.*

## Q.NO. 77.

**இன்வாய்ஸ் கரன்சி***யை தெரிவு செய்து கொள்ள* **இ-இன்வாய்ஸில் வசதிகள்** *உள்ளனவா?*

*ஆம், உள்ளது. ஒரு விற்பனையாளர் எந்தவொரு கரன்சியும் காட்ட முடியும். இயல்புநிலையில் அது ரூபாய் ஆக இருக்கும்.*

*Will the e-invoice have columns to show invoice currency?*

*Yes, the seller can display the currency. Default will be INR.*

## Q.NO. 78.

*இ-இன்வாய்ஸ் அமைப்பில், ஒரு வழங்குநர் அல்லது ஏற்றுமதியாளர், 'பணி ஆணை எண்ணை' குறிப்பிட இன்வாய்ஸ் வடிவமைப்பு அனுமதிக்குமா?*

*இதுபோன்ற கூடுதல் தகவல்களை அதாவது வேலை / கொள்முதல் ஆர்டர் அல்லது LC-எண் etc. ஆகிய தகவல்களை இன்வாய்ஸில் தெரிவிக்க வேண்டுமானால், IRN / QR Code உருவாக்கத்திற்குப்பிறகு இன்வாய்ஸினை தங்களது ERP / பில்லிங் (ம) கணக்கிட்டு*

*மென்பொருளில் உருவாக்கும் பொழுது, இத்தகைய விவரங்களை நிரப்பி கொள்ளலாம்*

*Whether the system permits the supplier/ exporter to add "Work order Number" in the format GST INV-01 ?*

*Such additional details for reference of the supplies like Work/purchase order or LC-number etc. can be incorporated in the invoice by the supplier while issuing the same with the IRN / QR-Code generated by posting the specified details on the IRP.*

# இ-இன்வாய்ஸ் - IRN உருவாக்கம்

## e-invoice - Generation of IRN

### Q.NO. 79.

**இ-இன்வாய்ஸ் எண் மற்றும் இ-இன்வாய்ஸ் குறிப்பு எண் (IRN) ஆகிய இரண்டும் ஒன்றாக இருக்க வேண்டுமா? அவை இரண்டும் இன்வாய்ஸில் இடம்பெற வேண்டுமா?**

இல்லை. இன்வாய்ஸ் எண் மற்றும் IRN ஆகியவை வேறுபட்டவை மற்றும் இரண்டும் கட்டாயமானவை. CGST விதிகள், 2017 இன் விதி 46 இன் படி, தொடர் இன்வாய்ஸ் எண் (ஒன்று அல்லது பல தொடர்களில் 16 எழுத்துக்குறிகளுக்கு மேற்படாமல், எழுத்துக்கள் அல்லது எண்கள் அல்லது சிறப்பு எழுத்துக்கள் மற்றும் அதன் எந்தவொரு சேர்க்கையையும் கொண்ட, ஒரு நிதியாண்டிற்கான தனித்துவமானதாக, சப்ளையரால் ஒதுக்கப்பட வேண்டும் அதன் வடிவம் ஒரு வணிகத்திலிருந்து மற்றொரு வணிகத்திற்கு விதிகளுக்குபட்டு மாறுபடும்.

ஆனால் IRN என்பது, இ-இன்வாய்ஸின் வெற்றிகரமான பதிவின்போது, IRPயால் தானாக உருவாக்கப்படும் ஒரு தனித்துவமான குறிப்பு எண், ஆகும் (எ.கா. 35054cc24d97033afc24f49ec4444dbab81f542c555f9d30359dc75794e06bbe). IRN உட்கொண்ட QR Codeஐ இன்வாஸில் இடம் பெற செய்வது கட்டாயம் ஆகும். QR Code தவிர IRN எண்ணையும் இன்வாஸில் இடுவது விருப்பத்தை பொருத்ததாகும்.

*Whether the Invoice number should be the same as Invoice Reference Number (IRN) and whether both the IRN and invoice number are mandatory on the invoice?*

*No. The Invoice number and the IRN are different and both are mandatory. The running serial Invoice no. (not exceeding 16 characters in one or multiple series, containing alphabets or numerals or special characters and any combination thereof, unique for a financial year ) in terms of the Rule 46 of CGST Rules, 2017, has to be assigned by the supplier and it is internal to the business entity.Invoice numbering pattern can differ from business to business, but it should be as per the said provision.*

*The IRN (e.g. 35054cc24d97033afc24f49ec4444dbab81f542c555f9d30359dc75794e06bbe), on other hand, is a unique reference number, auto-generated, on IRP, after successful submission of the GST INV-01 with the specified details. It is mandatory to print the IRN embedded in the QR-code, on the Invoice issued by the supplier. Separate mention of the IRN on the invoice, in addition to the QR-code embedded with IRN, is optional.*

## *Q.NO. 80.*

**IRN, சப்ளையர் ஈஆர்பியில்** *சேமிக்கப்பட* **வேண்டுமா***?*

*சப்ளையர் அவரின் ஒவ்வொரு* ***இன்வாய்ஸுக்கும்*** *IRN ஐ குறிப்பிட வேண்டும். IRN இல்லாத இன்வாய்ஸ் ஒரு சட்டப்பூர்வ ஆவணமாக இருக்காது என்பதால் ERP-யில் அதை வைத்திருப்பது நல்லது.*

*Whether the IRN is to be captured in the Supplier's ERP?*

*Supplier has to keep the IRN against each of its invoice. It will be advisable to keep the same in the ERP as invoice without IRN will not be a legal document.*

## Q.NO. 81.

**சமர்ப்பிக்கப்பட்ட இ-இன்வாய்ஸை IRP*யால்* நிராகரிக்க முடியுமா? IRP-க்கு இ-இன்வாய்ஸ் விவரங்களை அளித்தால், போர்ட்டலில் என்ன சரிபார்ப்புகள் செய்யப்படும்?**

*ஆம். IRP இன்வாய்ஸை நிராகரிக்கலாம். **இ-இன்வாய்ஸில்** பதிவு வெற்றிபெறாது போனால் அதன் தொடர்புடைய பிழைக் குறியீடுகளுடன் இ-இன்வாய்ஸ் நிராகரிக்கப்படும் (இது நிராகரிப்பதற்கான காரணங்களைப் புரிந்து கொள்ள உதவும்) IRN னின் பிழை குறியீடு, பிழை தகவல், பிழைக்கான காரணம் மற்றும் அதற்கான தீர்வு பற்றி கீழே கொடுக்கபட்டுள்ள சுட்டியில் அறியலாம்.*

*https://einvoice1-trial.nic.in/others/geterrorcodes/INV*

*ஒரு இன்வாய்ஸ் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதா என்றும், GST அமைப்பில் உள்ளதா என்பதையும் IRP சரிபார்க்கும்.*

*(இந்தச் சரிபார்ப்பு சப்ளையர்களின் GSTIN-இன்வாய்ஸ் எண் மற்றும் அதன் வகை, கணக்கு ஆண்டு ஆகியவற்றின் கலவையை அடிப்படையாகக் கொண்டது, இது IRN ஐ உருவாக்கவும் பயன்படுத்தப்படுகிறது). அதே இ-இன்வாய்ஸ்(ஆவணம்) ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்தால், அது IRP ஆல் நிராகரிக்கப்படும்.*

*Can IRP reject a submitted GST INV-01? On reporting invoice details to IRP, what validations will be performed on the portal?*

*Yes. IRP can reject GST INV-01. In case of failure to register the invoice IRN will not be generated and the system would reflect relevant error codes, which would give an idea about reasons for rejection. The IRN Error-Code; Error- Message; Reasons for*

*Error; and the Resolution for each of the errors can be accessed at: https://einvoice1-trial.nic.in/others/geterrorcodes/INV.*

*IRP will also check whether the invoice was already reported and existing in the GST System. This validation is based on the combination of Supplier's GSTIN-Invoice Number- Type of Document-Fin.Year, which is also used for generation of IRN. In case the same document (invoice /DBN/CDN) has already been reported earlier, it will be rejected by IRP.*

# இ-இன்வாய்ஸ் - IRN / QR குறியீடு அச்சிடுதல்

## e-invoice - Printing of Invoice / IRN / QR Code

## Q.NO. 82.

### என்னால் இ-இன்வாய்ஸ் அச்சிட முடியுமா?

*ஆம். இ- இன்வாய்ஸ் ஐ அச்சிடலாம். உண்மையில், வழங்கல்களுக் கான உத்தேசிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விவரங்களை, GST INV-01 ன் மூலம் வெற்றிகரமாக சமர்ப்பித்தவுடன், IRP ஆனது இ-இன்வாய்ஸிற்கான IRN & QR-குறியீட்டை உருவாக்கி, சப்ளையர்களின் ERP கணக்குகள் /பில்லிங் மென்பொருளுக்கு வழங்குகிறது. IRN & QR-Code கொண்ட இ-இன்வாய்ஸை அச்சிடுவதற்கு தேவைப்பட்டால் PDF ஆக மாற்ற இயலும். சொந்தமாக ERP /கணக்கியல் மென்பொருள் இல்லாத வணிகங்கள், இலவச ஆ்ஃப்லைன் பயன்பாட்டை பதிவிறக்கம் செய்து, (மொத்த உருவாக்கும் கருவி) IRP யில் இன்வாய்ஸ் விவரங்களை பதிவேற்றி, கையொப்பமிடப்பட்ட இ-இன்வாய்ஸை (JSON இல்) பெறலாம். மேலும் இ-இன்வாய்ஸை சேமித்தல் / அச்சிடுதல் / மின்னஞ்சல் மூலம் பெறுதல், போன்றவற்றிற்கு 'மனிதர்கள் படிக்கக்கூடிய' PDF நகலை உருவாக்க இ-இன்வாய்ஸ் போர்ட்டலில் வசதி உள்ளது.*

### Can I print an e-invoice?

*Yes. The e-invoice can be printed. In fact, on successful submission of GST INV-01 with the specified details of the invoice proposed to be issued for the supplies, the IRP generates the IRN & QR-Code which are received by the suppliers on their ERP/Accounting/Billing System, for further issue of the e-invoice to cover the supplies. The e-invoice with IRN & QR-Code can be converted it into PDF for printing.*

*Businesses who don't have their own ERP/Accounting Software, will be downloading and using the free offline utility ('bulk generation tool') to upload invoice data on e-invoice portal and obtain signed invoice (in JSON format). In this scenario also, there is a facility on e-invoice portal to generate 'human-readable' PDF copy of invoice, for save/print/e - mail etc..*

## Q.NO. 83.

### *இ-இன்வாய்ஸில்* IRN அச்சிட வேண்டுமா?

*இல்லை. இது கட்டாயமில்லை. IRN QR குறியீட்டில் உட்பொதிக்கப்பட்டுள்ளது. இ-இன்வாய்ஸில் உள்ள கட்டாய விவரங்களில் QR குறியீடு ஒன்றாகும். IRN-ஐ தனிப்பட்ட முறையில் கூடுதலாக குறிப்பிடுவது விருப்பத்தின் பேரில் அமைவதாகும்.*

### *Do I need to print IRN on the invoice?*

*No. QR Code embedded with the IRN is mandatory on the invoice. Separate mention of the IRN, in addition to the QR Code embedded with the IRN , is optional.*

## Q.NO. 84.

### *இ-இன்வாய்ஸில்* QR குறியீட்டை அச்சிட வேண்டுமா? அப்படியானால்,இ-இன்வாய்ஸ் நகலில் அதன் அளவு மற்றும் இடம் என்னவாக இருக்கும்?

*ஆம். IRP இலிருந்து பெறப்பட்ட IRN உட்பொதிக்கப்பட்ட QR குறியீடு பிரித்தெடுக்கப்பட்டு இன்வாய்ஸில் அச்சிடப்படும். இது CGST விதிகளின் விதி 46 இன் கீழ் இன்வாய்ஸின் கட்டாய விவரங்களில் ஒன்றாகும். இருப்பினும், இன்வாய்ஸ் தவிர, ஒரு தனி காகிதத்தில் QR குறியீட்டை அச்சிட அனுமதி இல்லை. அச்சிடப்பட்ட QR குறியீடு ஒரு QR குறியீடு*

*ரீடரால் படிக்கக்கூடிய அளவுக்கு தெளிவாக இருக்கும் போது, இன்வாய்ஸில் அதன் அளவு மற்றும் அதை பொருத்தும் இடம் ஆகியவை பதிவு செய்யப்பட்ட நபரின் விருப்பத்தைப் பொறுத்தது*

*Do I need to print QR Code on the invoice? If so, what shall be its size and location on the invoice copy?*

*Yes. The QR code embedded with the IRN received from IRP , shall be extracted and printed on the invoice. This is one of the mandatory particulars of invoice under Rule 46 of CGST Rules.*

*However, printing of QR code on a separate paper, other than the Invoice itself, is not allowed. While the printed QR code shall be clear enough to be readable by a QR Code reader, the size and its placing on invoice is up to the preference of the notified registered person.*

## Q.NO. 85.

***இ-இன்வாய்ஸில் அச்சிடப்பட வேண்டிய கட்டாய உள்ளடக்கங்கள் என்ன?***

*உட்பொதிக்கப்பட்ட இ-இன்வாய்ஸ் குறிப்பு எண்ணுடன் (IRN) கூடிய QR குறியீடு உட்பட, CGST விதிகளின் விதி 46ன் படியான விவரங்கள் இருக்க வேண்டும்.*

*What are the mandatory contents of e-invoice ?*

*The mandatory particulars shall be as per Rule 46 of CGST Rules, 2017, including QR code embeddedInvoice Reference Number (IRN).*

## Q.NO. 86.

**IRP தனது டிஜிட்டல் கையொப்பம் "ஒப்புகை எண்." மற்றும் "தேதி"*ஐ,* IRN-ல் *பதிவிடுகிறது.* இ-இன்வாய்ஸ் வழங்கும் போது இவையும் அச்சிடப்பட வேண்டுமா?**

*இல்லை. இ-இன்வாய்ஸில் இந்த விவரங்களை அச்சிடப்பட வேண்டியது கட்டாயம் இல்லை.*

*"ஒப்புகை எண்" மற்றும் IRP வழங்கிய "தேதி" குறிப்புக்காக மட்டுமே. 15 இலக்க எண்ணாக இருப்பதால், இ-இன்வாய்ஸ் அச்சிடுவதற்கும் அல்லது இ-வே பில் உருவாக்குவதற்கும் (64-எழுத்துக்கள் கொண்ட நீண்ட IRN-ஐக் குறிப்பதற்குப் பதிலாக) ஒப்புகை எண் கைகொடுக்கும்.*

*While receiving IRN, the IRP is also adding its "digital signature", "Acknowledgement No." and "Date". Whether these details are also required to be printed while issuing invoice?*

*No. There is no mandate to print "digital signature of IRP", it's "Acknowledgement No." and "Date" on the e-invoice copy. The "Acknowledgement No." and "Date" given by IRP are only for reference. Being a 15-digit number, the acknowledgement number will also come handy for printing e-invoice or for generating e-way bill, instead of keying in the 64-character long IRN.*

## Q.NO. 87.

*இ-* **இன்வாய்ஸ்** *பொருந்தும் இடங்களில், இ-* **இன்வாய்ஸ்** *இரு / மும்மடங்கு* **நகல்களை** *வழங்க வேண்டுமா?*

*இ-இன்வாய்சிங் பொருந்தும் இடங்களில், CGST விதிகள், 2017 இன் விதி 48 (6) இன் கீழ் கூறப்பட்டுள்ளபடி, இன்வாய்ஸ் நகல்களை இருமடங்கு / மும்மடங்கு நகல்களாக வழங்க வேண்டிய அவசியமில்லை.*

*Whether e-invoice needs to issue in duplicate/triplicate, in case e-invoice is applicable?*

*Where e-invoicing is applicable, there is no need of issuing invoice copies in triplicate/duplicate, as envisaged under Rule 48(6) of CGST Rules, 2017.*

## Q.NO. 88.

**IRP இல் பதிவு செய்யப்பட்ட** *இ-இன்வாய்ஸினை* **பதிவிறக்கம் செய்து கையடக்க சாதனங்களில் சேமிக்க முடியுமா?**

*இது அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபரால் (சப்ளையர்) பயன்படுத்தப்படும் ERP / கணக்கியல் / பில்லிங் மென்பொருளைப் பொறுத்தது,. IRPயிலிருந்து பெறப்பட்ட, கையொப்பமிடப்பட்ட இ-இன்வாய்ஸ் JSON ஐ சப்ளையர் முறையாக பாதுகாத்து வைப்பது நல்லது.*

*Will it be possible for invoices that are registered on IRP to be downloaded and saved on handheld devices?*

*It depends on the ERP/Accounting/Billing Software, being used by the notified registered person (supplier). It is advisable for the supplier to properly store the signed e-invoice JSON, as received from IRP.*

## Q.NO. 89.

*ஒரு அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர்* **IRN-ஐ** *உருவாக்க ஆஃப்லைன் பயன்பாட்டைப் பயன்படுத்தும் போது* **IRP-***யிலிருந்து பெறப்பட்ட கையொப்பமிடப்பட்ட JSON* **கோப்பின் நகல்** *சேமிக்கப்பட வேண்டுமா? [***IRN** *உருவாக்கபட்டப்பிறகு]*

*IRP இன்வாய்ஸ்களைச் சேமிப்பதில்லை, எனவே IRP இலிருந்து இ-இன்வாய்ஸ் JSONஐப் பதிவிறக்கும் செய்யும் வசதி குறைந்த நாட்களுக்கு*

*மட்டுமே கிடைக்கும் என்பதை வரி செலுத்துவோர் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

*கையொப்பமிடப்பட்ட இ-இன்வாய்ஸ் JSON-ஐ* ***GST*** *அமைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்யும் வசதி (சப்ளையர்கள் மற்றும் பெறுநர்களுக்கு, நீண்ட காலத்திற்கு) கூடிய விரைவில் உருவாக்கப்படும்.*

*Whether signed JSON file received from IRP [after generation of IRN] is required to be saved, in case a notified registered person uses offline utility to generate IRN?*

*IRP doesn't store invoices and hence the facility to download e-invoice JSON* ***from IRP*** *is available only for limited number of days. So, the taxpayers shall take care accordingly.*

*The facility to download signed invoice JSON* ***from GST System*** *(for suppliers and recipients, over a longer period of time) will be made available in due course.*

## Q.NO. 90.

*இ-இன்வாய்ஸின்* **தக்கவைப்பு/சேமிப்பு**/*காப்பகப்படுத்தும்* **காலம் என்ன?**

*CGST விதிகளின் 56(16) விதியின்படி, "பதிவு செய்யப்பட்ட நபரால் பராமரிக்கப்படும் கணக்குகள், அனைத்து இன்வாய்ஸுக்கள், சப்ளை பில்கள், கிரெடிட் மற்றும் டெபிட் நோட்டுகள் மற்றும் இருப்புகள், விநியோகங்கள், உள்நோக்கிய சப்ளை மற்றும் வெளிப்புற விநியோகம் தொடர்பான டெலிவரி சலான்கள் ஆகியவை, பிரிவு 36 இல் [CGST - சட்டம்] வழங்கப்பட்டுள்ள காலத்திற்கு பாதுகாக்கப்படவேண்டும்"*

*இது இ-இன்வாய்ஸுக்கும் பொருந்தும்.*

**What is the period of retention/storage/archival, in case of e -invoicing?**

*As per Rule 56(16) of CGST Rules, 2017, "Accounts maintained by the registered person together with all the invoices, bills of supply, credit and debit notes, and delivery challans relating to stocks, deliveries, inward supply and outward supply shall be preserved for the period as provided in section 36..." The same applies to e-invoicing also.*

## Q.NO. 91.

**போர்ட்டலில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில் இ- இன்வாய்ஸ் அச்சிடுவது கட்டாயமா அல்லது அறிவிக்கை/ பதிவு செய்யப்பட்ட நபர்கள் இன்வாய்ஸ்-க்கான தங்கள் சொந்த வடிவத்தை அச்சிட முடியுமா?**

*இ- இன்வாய்ஸ்-க்கான குறிப்பிட்ட வடிவமைப்பு எதுவும் இல்லை. ஆனால் இ- இன்வாய்ஸ் CGST விதிகள், 2017 இன் விதி 46 இன் படி இருக்கவேண்டும் மற்றும் அது IRN-உடன் உட்பொதிக்கப்பட்ட QR குறியீட்டைக் கொண்டு, அச்சிடப்பட வேண்டும்.*

**Is it mandatory to print e-Invoice as provided in the portal or the notified registered persons can adopt their own format for invoice?**

*There is no specified format for the e-invoice. The e-invoice shall be in terms of the Rule 46 of CGST Rules, 2017; and it should be printed, inter alia, with the QR-code embedded with the IRN, on it.*

# இ-இன்வாய்ஸ் IRN/ QR குறியீட்டின் சரிபார்ப்பு

## e-invoice - Verification of IRN / QR Code:

## Q.NO. 92.

**ஒரு இ-இன்வாய்ஸ் IRPக்கு முறையாக** *தெரிவிக்கப்பட்டதா* **என்பதை எவ்வாறு** *சரிபார்ப்பது?*

*IRP-இல் முறையாக தெரியபடுத்தப்பட்டப்பிறகு ஒரு இ-இன்வாய்ஸ் வழங்கப்பட்டதா என்பதை அறிய, QR குறியீடு பயன்பாட்டைச் சரிபார்க்கும் > einvoice1.gst.gov.in > உதவி > கருவிகளிலிருந்து பதிவிறக்கம் செய்யக்கூடிய "QR குறியீட்டைச் சரிபார்க்கவும்" மொபைல் பயன்பாட்டைப் பயன்படுத்தவும்.*

*மாற்றாக, கையொப்பமிடப்பட்ட JSON கோப்பு அல்லது QR குறியீடு (சரம்) ஆகியவற்றை இ-இன்வாய்ஸ் போர்ட்டலில் பதிவேற்றுவதன் மூலம் இ-இன்வாய்ஸின் நம்பகத்தன்மை அல்லது சரியான தன்மையை ஒருவர் சரிபார்க்கலாம்: einvoice1.gst.gov.in >* ***Search > 'Verify Signed Invoice'.***

*How to check to know whether an invoice was duly reported to IRP?*

*In order to know whether an e-invoice was issued after due reporting on IRP, use the* ***"Verify QR Code" mobile app*** *which may be downloaded from* ***einvoice1.gst.gov.in*** *> Help > Tools >* ***Verify QR Code App.***

*One can also verify the authenticity or correctness of an e-invoice by uploading the signed JSON file or Signed QR Code (string) on e-invoice portal:* ***einvoice1.gst.gov.in*** *>* ***Search > 'Verify Signed Invoice'.***

## Q.NO. 93.

### QR குறியீட்டில் என்னென்ன தரவுகள் உட்பொதிக்கப்பட்டுள்ளது?

*QR குறியீட்டில் இ-இன்வாய்ஸின் பின்வரும் முக்கிய விவரங்கள் இடம் பெற்றிருக்கும் :*

1. *சப்ளையரின் GSTIN;*
2. *பெறுநரின் GSTIN;*
3. *சப்ளையரால் ஒதுக்கப்பட்ட இன்வாய்ஸ் எண்;*
4. *இன்வாய்ஸ் உருவாக்கப்பட்ட தேதி;*
5. *இன்வாய்ஸ் மதிப்பு (வரி விதிக்கக்கூடிய மதிப்பு மற்றும் மொத்த வரி);*
6. *வரி உருப்படிகளின் எண்ணிக்கை;*
7. *முதன்மைப் பொருளின் HSN குறியீடு (வரி உருப்படி அதிக வரி விதிக்கக்கூடியதின் மதிப்பு);*
8. *தனித்துவமான IRN (இன்வாய்ஸ் குறிப்பு எண்/ஹாஷ்); மற்றும்*
9. *IRN உருவாக்கப்பட்ட தேதி.*

### *What data is embedded in QR Code?*

*The QR code will consist of the following key particulars of e-invoice:*

1. *GSTIN of the Supplier;*
2. *GSTIN of the Recipient;*
3. *Invoice number, as assigned by Supplier;*
4. *Date of generation of invoice;*
5. *Invoice value (taxable value and gross tax);*
6. *Number of line items;*

7. *HSN Code of main item (line item having highest taxable value);*
8. *Unique IRN (Invoice Reference Number); and*
9. *Date of Generation of IRN.*

## Q.NO. 94.

### ஒரு இன்வாய்ஸில் ஒன்றுக்கு மேற்பட்ட QR குறியீடுகள் இருக்க முடியுமா?

*ஆம். IRN தொடர்பான QR குறியீட்டைத் தவிர, வணிகத் தேவைகளின்படி தேவைப்படும் அல்லது வேறு ஏதேனும் சட்டப்பூர்வ தேவைகளால் கட்டாயப்படுத்தப்படும் வேறு எந்த QR குறியீட்டையும் இன்வாய்ஸில் வழங்க சப்ளையர்ருக்கு உரிமை உண்டு.*

*இதுபோன்ற சந்தர்ப்பங்களில், QR குறியீடுகள் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும், இதனால் அவை எளிதில் பிரித்தறியப்படும்.*

### *Is it possible to have more than one QR code on an invoice?*

*Yes. Apart from the QR code relating to IRN, the supplier is free to place any other QR Code which is required as per business needs or otherwise mandated by any other statutory requirement. In such cases, the QR Codes need to be marked clearly so that they can be distinguished easily.*

# இ-இன்வாய்ஸ் பெறுநருக்கு அனுப்புதல்

## e-invoice - Sending to Receiver

## Q.NO. 95.

**IRN உருவாக்கத்தி***ன்பின்,* **பெறுநருக்கு இ-இன்வாய்ஸை IRP மின்னஞ்சல்** *மூலமோ (அ) வேறுவகையிலோ* **அனுப்புமா?**

*இல்லை. IRP இ-இன்வாய்ஸை பெறுநருக்கு அனுப்பாது. IRP- லிருந்து கையொப்பமிடப்பட்ட JSON-ஐப் பெற்றவுடன், சப்ளையர் இ-இன்வாய்ஸ் (QR குறியீடு போன்றவற்றுடன்) பெறுநரிடம் 2017 CGST 46ஆம் விதியின் படி கட்டாய தகவல்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.*

*Whether, on generation of IRN, the e-invoice is sent by IRP by e-mail or otherwise, to the receiver?*

*No. IRP will <u>not</u> send the e-Invoice to the receiver, at all.*

*Upon receiving IRN & QR-code [signed JSON] from the IRP, it is for the supplier to generate the e-invoice, along with QR Code embedded with IRN; and all other relevant details as prescribed under Rule 46 of CGST Rules, 2017; and send it to the receiver.*

## Q.NO. 96.

**சப்ளையர் இ-இன்வாய்ஸை பெறுநருக்கு எவ்வாறு அனுப்புவார்?**

*IRN-உடன் உட்பொதிக்கப்பட்ட QR குறியீட்டுடன் CGST விதிகள், 2017 இன் விதி 46 இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட மற்ற அனைத்து தொடர்புடைய விவரங்களையும் உள்ளடக்கிய இ- இன்வாய்ஸின் நகலை பெறுநருக்கு*

*அனுப்பலாம். QR குறியீடு உட்பட, IRP இலிருந்து பெறப்பட்ட JSON இன் PDF ஐ பரிமாறிக்கொள்வது ஒரு பரிந்துரைக்கப்பட்ட சிறந்த வழிமுறையாக இருக்கும்.*

*எவ்வாறாயினும், இ-இன்வாய்ஸ் பரிமாற்றத்தை கணினியிலிருந்து கணினிக்கு செயல்படுத்துவதற்கான ஒரு வழிமுறை கூடிய விரைவில் கொண்டுவரப்படும்.*

*How will the supplier send the e-invoice to the receiver?*

*The hard copy of the e-invoice, along with QR Code embedded with IRN; and all other relevant details as prescribed under Rule 46 of CGST Rules, 2017, can be sent to the receiver. A suggested mechanism may be to exchange the PDF of the JSON received from IRP, including QR code, as the best authenticated version of the e-invoice for business transactions.*

*However, a mechanism to enable system-to-system exchange of e-invoices through eco- system partners will be made available in due course.*

## Q.NO. 97.

*சிறு வரி செலுத்துவோர் (**இ-இன்வாய்ஸ்** வழங்க கட்டாயப்படுத்தப்படாதவர்கள்) அறிவிக்கை/ பதிவு செய்யப்பட்ட நபர்களிடமிருந்து **இ-இன்வாய்ஸை** எவ்வாறு **பெறுவார்கள்**?*

*இ-இன்வாய்ஸை வழங்க கட்டாயப்படுத்தப்படாத வரி செலுத்துவோர், தற்போது செய்யப்படும் அதே வழியில் அறிவிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட நபர்களிடமிருந்து இ-இன்வாய்ஸைப் பெறுவார்கள். IRN உடன் உட்பொதிக்கப்பட்ட QR குறியீட்டுடன் CGST விதி, 2017 இன் விதி 46 இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட மற்ற அனைத்து தொடர்புடைய விவரங்களையும் உள்ளடக்கிய இ-இன்வாய்ஸை பொருத்தமான*

*வழிகளில் (மின்னஞ்சல், கூரியர் போன்றவற்றின் மூலம்) பெறுநருக்கு அனுப்பலாம். மாற்றாக, அறிவிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட நபர்கள் கையொப்பமிடப்பட்ட இ-இன்வாய்ஸை, JSON-யிலிருந்து PDF-ஆக மாற்றி மின்னஞ்சல் மூலம் பகிர்ந்து கொள்ளலாம்.*

*எவ்வாறாயினும், இ-இன்வாய்ஸ் பரிமாற்றத்தை கணினியிலிருந்து கணினிக்கு செயல்படுத்துவதற்கான ஒரு வழிமுறை கூடிய விரைவில் கொண்டுவரப்படும்.*

*How do the small taxpayers (who are not mandated to issue e-Invoice) receive the e-invoices from the notified registered persons?*

*The taxpayers, who are not mandated to issue e-Invoice, would receive the e-invoices from the notified registered persons in the same way as it is being done now. The hard copy of the e-invoice, along with QR Code embedded with IRN; and all other relevant details as prescribed under Rule 46 of CGST Rule, 2017, can be sent to the receiver by suitable means (by post, courier etc). Alternatively, the notified registered persons can convert the signed e-invoice JSON into PDF and share the same by e-mail.*

*However, a mechanism to enable system-to-system exchange of e-invoices will be made available in due course.*

## Q.NO. 98.

**இ-இன்வாய்ஸ் நடைமுறை உள்ள நிலைகளில், சரக்குகள் கொண்டு செல்லும் போது அச்சடிக்கக்கப்பட்ட இ-இன்வாய்ஸ் எடுத்து செல்வது அவசியமா?**

*அச்சடிக்கப்பட்ட இ-இன்வாய்ஸ் எடுத்து செல்வது அவசியமில்லை. CGST விதி 138A (2) ன்படி QR குறியீடு மற்றும் IRN இ-இன்வாய்ஸில்*

*உட்பொதிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் சரிபார்க்கையில் நகலுக்கு மாறாக மின்னனு முறையில் காண்பிக்கலாம்.*

*எனவே, சரக்குகளின் போக்குவரத்தின் போது அச்சடிக்கப்பட்ட இ-இன்வாய்ஸ் எடுத்துச் செல்வது கட்டாயமில்லை.*

*Where e-invoicing is applicable, whether carrying e-invoice print during transportation of goods is mandatory?*

*No. As per Rule 138A(2) of CGST Rules, 2017, where e-invoicing is applicable, "the Quick Reference (QR) code having an embedded Invoice Reference Number (IRN) in it, may beproduced electronically, for verification by the proper officer, in lieu of the physical copy of such tax invoice." Therefore, carrying e-invoice print during transportation of goods is not mandatory.*

## Q.NO. 99.

*ஏற்கனவே IRN உருவாக்கப்பட்ட, இன்வாய்ஸின் விவரங்களை நான் திருத்த முடியுமா?*

*இல்லை. IRN- உருவாக்கத்திற்குப்பிறகு, IRP-யில், GST INV-01-யில் குறிப்பிட்ட விவரங்கள் தொடர்பாக திருத்தங்கள் செய்ய சாத்தியமில்லை. அறிவிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட நபருக்கு, IRN உருவாக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள், இ -இன்வாய்ஸ் வழங்குவதற்கு முன்போ அல்லது இ -இன்வாய்ஸ் உருவாக்கத்திற்குப்பிறகோ, அதை ரத்து செய்வதற்கான அனுமதி உள்ளது. இருப்பினும், இணைக்கப்பட்ட இ-வே பில் செயலில் இருந்தால் அல்லது போக்குவரத்தின் போது அதிகாரியால் சரிபார்க்கப்பட்டிருந்தால், IRN ரத்து அனுமதிக்கப்படாது.*

*மேலும், IRN ரத்துசெய்யப்பட்டால், அதன் விவரங்கள் GSTR-1லும் பதிவுசெய்யப்படும்.*

*Can I amend details of a reported invoice for which IRN was already generated?*

*No. Amendments are not possible in respect of the specified details posted on GST INV-01, after the generation of IRN, on IRP.*

*The notified registered person has an option to cancel the IRN on IRP within 24 hours of generation of IRN, for any reason, either before issuing e-Invoice or after generation of e-Invoice. However, if the connected e-way bill is active or verified by officer during transit, cancellation of IRN will **not** be permitted.*

*In case of cancellation of IRN, GSTR-1 will also be updated with such 'cancelled' status.*

## Q.NO. 100.

*ரத்து செய்யப்பட்ட IRN தொடர்பான இன்வாய்ஸ் எண்ணை மீண்டும் பயன்படுத்த முடியுமா?*

*பயன்படுத்த இயலாது. ஒருமுறை IRN ரத்துசெய்யப்பட்டால், அதன் இன்வாய்ஸ் எண்னை பயன்படுத்த IRP அனுமதிக்காது. ரத்து செய்ய அனுமதிக்கப்பட்ட 24 மணி நேரத்தின் உள்ளும் ரத்து செய்யப்பட்ட இன்வாய்ஸ் எண் கொண்டு மறுபடியும் IRN உருவாக்க சாத்தியமில்லை. அப்படி முயற்சி செய்தால், அது நிராகரிக்கப்படும்.*

*ஏனெனில் IRN என்பது சப்ளையர்களின் GSTIN, ஆவண எண், ஆவண வகை & நிதியாண்டு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு தனித்துவமான மின்னணு குறியீடு ஆகும்.*

*Can an invoice number of a cancelled IRN be used again?*

*No. Once an IRN is cancelled, the concerned invoice number cannot be used again to generate another e-invoice/IRN, even within the permitted cancellation window of 24 hours. If it is used again, then the same will be rejected, when it is uploaded on*

*IRP, as IRN is a unique string based on Supplier's GSTIN, Document Number, Type of Document & Financial Year.*

## Q.NO. 101.

*உருவாக்கப்பட்ட இ-இன்வாய்ஸின் ஒரு பகுதியை ரத்து செய்ய இயலுமா?*

*இயலாது. இ-இன்வாய்ஸை முழுவதுமாக மட்டுமே ரத்து செய்ய முடியும். தெரியபடுத்தப்பட்ட இ-இன்வாய்ஸை பகுதியாக ரத்து செய்ய அனுமதி இல்லை. மாறாக, விநியோகத்திற்கு புதியதாக ஒரு இ-இன்வாய்ஸ் உருவாக்கிக்கொள்ளலாம்.*

*Can I partially cancel a reported invoice?*

*No. It has to be cancelled in toto. A partial cancellation of reported e-invoice is not allowed. A fresh e-invoice could be issued to cover the actual supply.*

## Q.NO. 102.

*நான் IRN-இட்ட இ-இன்வாய்சை உருவாக்கியுள்ளேன். அனால் அதில் முரண்பாடு உள்ளது. மேலும் பரிவர்த்தனை நடை பெறவில்லை. எனவே, எனது கணினியில் அதை ரத்து செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. இருப்பினும், 24 மணிநேரம் கழிந்து விட்டதால், IRP-ல் IRN-ஐ ரத்துசெய்ய முடியவில்லை. இவ்வகையான தருணத்தில் என்ன செய்ய வேண்டும்?*

*அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர்களால் IRN ஐப் பெறுவது பெறுநர்களுக்கு குறிப்பிட்ட ஆவணங்களை வழங்குவதற்கு முன் செய்ய வேண்டிய சட்டப்பூர்வ தேவையாகும். IRN-ஐ உருவாக்கிய பிறகு, IRP-இல்*

*திருத்தங்கள் சாத்தியமில்லை மற்றும் IRN-ஐ ரத்து செய்வது ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது (24 மணி நேரம்). எனவே, வரி காலத்தில் வழங்கப்பட்ட இன்வாய்ஸ்களின் விவரங்கள் GSTR-1ல் தெரிவிக்கப்பட வேண்டும். இருப்பினும், ஏதேனும் இ-இன்வாய்ஸ் ரத்து செய்யப்பட்டால், அதை சமர்ப்பிப்பதற்கு முன்பு GSTR-1-லிருந்து அழிக்கும் (ரத்து) வசதியுள்ளது.*

*ஏதேனும் ரத்து செய்யப்பட்ட இ-இன்வாய்ஸுக்கு மாற்றாக வழங்கப்பட்ட புதிய இ-இன்வாய்ஸ் உருவாக்கியிருந்தால் அவ்விவரம் GSTR-1 அட்டவணையில் தானாக நிரப்பப்பட்ட இ-இன்வாய்ஸ் விவரங்களில் இடம் பெற்றிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்படி இடம் பெறாமல் இருந்தால் அவற்றை GSTR-1-ஐ சமர்ப்பிப்பதற்கு முன்பு சேர்க்க வேண்டும்.*

> *I have generated IRN for an invoice. There was a discrepancy in the invoice and supply also didn't materialize. Hence, I had to cancel eInvoice in my system. However, I could not cancel the IRN on IRP as the cancellation window (24 hours) had expired. What to do?*

*Obtaining IRN by notified registered persons is a legal requirement before issue of specified documents to recipients. Upon generation of IRN, amendments are not possible on IRP and cancellation of IRN only is permitted within a time window of 24 hours. So, the details of invoices actually issued during the tax period will have to be reported in GSTR-1. However, in case any e-invoice is cancelled, it can be deleted form the GSTR-1 before submission.*

*The notified registered person shall ensure that details of the fresh e-invoice issued as substitution to any cancelled e-invoice, if any, is figuring in the list of auto-populated invoices in the GSTR-1 for the relevant tax period. If not, it should be incorporated before submission of GSTR-1.*

## Q.NO. 103.

**சில சிக்கல்களால்**, *அறிவிக்கை/பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், உருவாக்கிய* *இன்வாய்ஸுக்கான பொருட்களை அன்றே* **அனுப்பவில்லையெனில் அதை மறுநாள் அதே** *இன்வாய்ஸ்* **கொண்டு அனுப்ப முடியுமா?**

*பொருட்களின் தன்மை ஒரே மாதிரியாக இருந்து, வரி விதிக்கக்கூடிய பொருட்களின் மதிப்பு மற்றும் வரி விகிதத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றால் தாமதம் ஏற்பட்டாலும், அதே இன்வாய்ஸில் முறையான இ-வே பில் கொண்டு பொருட்களை வழங்குவதற்கு உபயோகிக்கலாம். ஆனால் ஒரு இ-இன்வாய்ஸ் ரத்து செய்ய்ப்ப்டிருப்பின் அதே இ-இன்வாய்ஸ் எண்ணை பயன் படுத்த இயலாது.*

*Whether a notified registered person use the same invoice, when they failed to issue the same generated on the previous day, for supply of the same goods?*

*If the nature of goods remains the same and there is no change in taxable value and tax rate and only the shipment/dispatch is delayed, the same e-invoice can be used for supply of goods, along with a valid e-Way Bill. However, if the invoice is cancelled, then the same number cannot be used for the fresh invoice generated subsequently.*

## Q.NO. 104.

**ஏற்றுமதி** *இன்வாய்ஸ்-க்கு இன்வாய்ஸ்* **விவரங்களைப் பதிவேற்ற வேண்டியிருக்கும் போது**, *துறைமுக* **விவரங்கள்**

## மாற்றப்பட வேண்டுமானால், எப்படி திருத்துவது/சரி செய்வது?

*IRP-யில், IRN- உருவாக்கப்பட்டவுடன், GST INV-01இல் உள்ள குறிப்பிட்ட விவரங்களை, துறைமுக விவரங்கள் உட்பட, எதையும் மாற்ற/புதுப்பிக்க இயலாது. துறைமுக குறியீட்டை மாற்ற ஏதேனும் தேவைபட்டால், 24 மணி நேரத்திற்குள் IRN ரத்து செய்து, சரியான துறைமுக குறியீட்டுடன் ஒரு புதிய IRN ஐ உருவாக்க முடியும்.*

*காலம் தாழ்ந்து விட்டால், GST போர்ட்டலில் GSTR-1 ஐ தாக்கல் செய்யும் போது இ-இன்வாய்ஸ் விவரங்களில் உள்ள முரண்பாட்டை சரிசெய்ய முடியும்.*

*மேலும், GSTR-1 ஏற்கனவே தாக்கல் செய்யப்படிருந்தால், GSTR-1 க்கான திருத்த விருப்பத்தைப் பயன்படுத்தி முரண்பாட்டை சரிசெய்ய முடியும், இது GST போர்ட்டலில் வழங்கப்பட்டுள்ளது.*

## *When Invoice details need to be uploaded for Export Invoice, if port details needs to be changed, how to amend/correct the details ?*

*Once IRN was generated on IRP, the specified details in GST INV-01, including the Port Code, cannot be amended. In case there is any requirement to change the port code, the IRN could be cancelled within 24 hours and generate a fresh IRN with correct port code.*

*In case the discrepancy was noticed subsequently, the discrepancy in e-invoice details could be rectified while filing GSTR-1 on the GST portal.*

*Further, in case the GSTR-1 was already filed, the discrepancy can be rectified by using the amendment option for GSTR-1, as provided on GST portal.*

# இ-இன்வாய்ஸ். இ-வே பில் / ஜிஎஸ்டி விவர அறிக்கை(படிவம்) இணைப்பு/ தொடர்பு:

# e-invoice - Linkage with E-Way Bill / GST Return:

## Q.NO. 105.

*இ-இன்வாய்ஸிங் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், இ-வே பில் கட்டாயமா?*

*ஆம். சரக்குகளை ஏற்றிச் செல்லும் போது, இ-வே பில் CGST விதிகள், 2017 இன் (விதி 138 முதல் 138 இ வரை) படி இ-வே பில் தேவைப்படும் இடங்களில், கட்டாயம் தேவை.*

*Whether e-way bill is compulsory, with the introduction of e-invoicing?*

*Yes. While transporting goods, wherever the e-way bill is mandatory as per the EWB-rules (Rule 138 to 138E of CGST Rules, 2017), the requirement continues to be mandatory.*

## Q.NO. 106.

*இ-வே பில் தானாக உருவாக்கப்படுமா?*

*IRPக்கு இன்வாய்ஸ் விவரங்களைப் பதிவேற்றும் பொழுது, இ-வே பில் பகுதி-A மற்றும் பகுதி-B விவரங்க்களை பதிவேற்றிருந்தால், இ-வே பில் தானாக உருவாக்கப்படும்.*

*IRPல் இ-இன்வாய்ஸ் பதிவேற்றும் பொழுது பகுதி-B விவரங்கள் பதிவேற்றம் செய்யவில்லையென்றால் பகுதி B விவரங்க்களை IRPயில்*

*உள்ள இ-வே பில் Tab மூலமாகவோ அல்லது இ-வெபில் போர்ட்டல் மூலமாகவோ பதிவேற்றம் செய்து இவேபில் உருவாக்கிக் கொள்ளலாம்.*

### *Whether the e-way bill get auto-generated?*

*In case both Part-A and Part-B of e-way bill are provided while reporting invoice details to IRP, e-way bill will be auto-generated.*

*In case Part-B details are not provided at the time of reporting specified details of invoice to IRP, the same will have to be provided by the user through 'e-way bill' tab in IRP log in or e-Way Bill Portal, so as to generate e-way bill.*

## *Q.NO. 107.*

### பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை மூலம் *இ-இன்வாய்ஸ்* வழங்கப்படும் போது *EWB* ஏன் தனியாக தேவைப்படுகிறது?

*இ-இன்வாய்ஸ் மற்றும் இ-வே பில் உருவாக்கம் என்பது பல்வேறு தொடர்புடைய சட்ட விதிகளின் கீழ், கட்டாய சட்டரீதியான தேவைகள் ஆகும். அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அவர்களது விற்பனைஅளவு, 2017-18 ஆம் ஆண்டிலிருந்து எந்தவொரு நிதியாண்டிலும் ரூ.20 கோடிக்கு மேல் கடந்தால் இ-இன்வாய்ஸ் உருவாக்கம் என்பது கட்டாயமாகும். இ-இன்வாய்ஸ் உருவாக்குவது கட்டாயமா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இ -வே பில் உருவாக்கம் என்பது வேறுபட்ட வரம்பை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவதாக இ-வே பில் சப்ளையர் (அல்லது) பெறுநரால் (அல்லது) டிரான்ஸ்போர்ட்டரால் உருவாக்கப்படலாம். ஆனால் இ-இன்வாய்ஸ் பதிவு செய்யப்பட்ட நபர்களால் மட்டுமே வழங்கப்படும்.*

*மேலும், EWB என்பது, தொடர்புடைய CGST விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சரக்குகளின் போக்குவரத்திற்கானது. இது*

சேவைகளுக்குப் பொருந்தாது. ஆனால் இ-இன்வாய்ஸ் (மற்றும் / அல்லது CDN/DBN) உருவாக்கம் என்பது சரக்குகள் மற்றும்/ அல்லது சேவைகளை வழங்குவதற்கு அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு கட்டாயமாகும்.

எனவே, EWB மற்றும் இ-இன்வாய்ஸ் இரண்டும் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு வெவ்வேறு சட்டத்தின்படி கட்டாயமானவை.

*Why EWB is required separately when e-invoice is issued through the prescribed procedure?*

*Ans.: Generation of e-invoice and e-way bill are mandatory statutory requirements, as applicable under different relevant statutory provisions. Generation of e-invoice is for notified registered persons with turnover exceeding Rs.20 crore during any Financial Year since 2017-18. Generation of E-way bill is based on a different threshold limit irrespective of the fact whether the person is liable to issue e-invoice or not. Secondly e-way bill can be generated either by the supplier (or) by the recipient (or) by the transporter, while e-invoice shall be issued by the notified registered persons.*

*Moreover, the EWB is for the movement of the goods, subject to the conditions envisaged in the relevant CGST Rules and not relevant for the services. But the e-Invoice (and / or CDN/DBN) is mandatory for supply of Goods/Services or both by the notified registered persons, for the supply or in relation to supply.*

*Thus, both EWB and E-invoice are mandatory for the notified registered persons for whom the relevant provisions are applicable as per Law.*

## Q.NO. 108.

இ-இன்வாய்ஸ் **வழங்கும் போது** EWB **ஐ ஒரே நேரத்தில் உருவாக்கு**து என்பதன் பொருள் **என்ன**? இ-இன்வாய்ஸ்

**உருவாக்கப்படும்போது, *EWB-ஐ* தனியாக உருவாக்க வேண்டிய** *அவசியமில்லையா?*

*இ-இன்வாய்ஸை உருவாக்கும் போது, சப்ளையரின் GSTIN, ஆவண எண் போன்ற தொடர்புடைய விவரங்கள் EWB ஐ உருவாக்குவதற்கு வசதியாக, இ-வே பில் அட்டவணை பகுதி -A மற்றும் B இரண்டிலும் தானாக நிரப்பப்படும். டிரான்ஸ்போர்ட்டர் விவரங்கள் போன்ற EWB இன் பகுதி-B க்கான கட்டாயத் தகவலை உள்ளிடுவதற்கான புலங்கள் GST INV-01 இல் உள்ளன. எனவே அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர்கள், இ-இன்வாய்ஸ் உருவாக்கும் நேரத்தில், டிரான்ஸ்போர்ட்டர் விவரங்கள் தெரிந்திருந்தால், GST INV-01 இல் தொடர்புடைய விவரங்களை நிரப்பி இ-வே பில்லை ஒரே நேரத்தில் உருவாக்கலாம்.*

*EWB இன் பகுதி-Bக்கான கட்டாயத் தகவல்களான டிரான்ஸ்போர்ட்டர் விவரங்கள் இ-இன்வாய்ஸ் உருவாக்கும் போது அவர்களிடம் இல்லை என்றால், இந்த விவரங்களை, EWB இன் பகுதி -B க்கான விவரங்களை இ-இன்வாய்ஸ் உருவாக்கத்திற்குப் பிறகு IRN / QR- குறியீட்டைத் தொடர்ந்து e-way bill போர்ட்டலில் பதிவேற்றலாம்.*

*இ-இன்வாய்ஸ் மற்றும் இ-வே பில் உருவாக்கம் என்பது பல்வேறு தொடர்புடைய சட்ட விதிகளின் கீழ், கட்டாய சட்டரீதியான தேவைகள் என்பதை கருத்தில் கொள்க.*

*What does it mean by simultaneous generation of EWB while issuing e-invoice? Does it mean that there is no need for separate generation of EWB when e-invoice is generated?*

*While generating e-invoice, the relevant details like GSTIN of supplier, Document number etc. are auto populated in both Table Part –A and B of the e-way bill, to facilitate generation of EWB. Columns for entering the mandatory information for Part-B of EWB like Transporters details are also available in the e-invoice GST INV-*

*01 and hence notified registered person, for the supplies of Goods, have the option to enter the relevant details, if available with them at the time of generation of e-invoice to simultaneously generate EWB.*

*In case the mandatory information for Part-B of EWB like Transporters details are not available with them at the time of generation of e -invoice the details for Part – B of EWB can be uploaded in the e way bill portal subsequent to generation of IRN/QR- code for e-invoice.*

*It may be noted that generation of e-invoice and e-way bill are mandatory statutory requirements, as applicable under different relevant statutory provisions.*

## Q.NO. 109.

> *IRN உருவாக்கிய பிறகு, இ-வே பில் உருவாக்குவதற்கு ஏதேனும் கால வரம்பு உள்ளதா?*

*அத்தகைய கால வரம்பு எதுவும் தற்போது GST அமைப்பில் இல்லை. ஆனால், IRN 30 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதால், அதன்பிறகு அதற்கான இ-வே பில் தயாரிக்க இயலாது.*

> *After generation of IRN, is there any time limit for generation of e-way bill (where applicable/desired)?*

*No such time limit is normally applicable presently in the system. But, the IRN itself is valid for 30 days from the date of generation. Hence, EWB cannot be generated, once IRN is not valid.*

## Q.NO. 110.

> *இ-இன்வாய்ஸ் விவரங்கள் ஜிஎஸ்டி கணினி அமைப்புக்கு பரிமாறப்படுமா? இந்த தகவல் GSTR படிவத்தில் தானாக வருமா?*

*ஆம். IRPல் பதிவேற்றப்பட்டபின், IRN இன்வாய்ஸ் விவரம். (பேலோட்) GST கணினி அமைப்பில் சேமிக்கப்படும்.*

*GST கணினி அமைப்பு அந்த விவரங்களை வழங்குநரின் GSTR-1 மற்றும் அந்தந்த பெறுநர்களின் GSTR-2A ஆகியவற்றில் தானாக நிரப்பும். IRN மற்றும் IRN தேதியும் 'இ-இன்வாய்ஸ்' உருவாக்கப்பட்ட மூலத்துடன் காட்டப்படும்.*

> *Will the e-invoice details be pushed to GST System? Will they populate the return?*

*Yes. On successful reporting of invoice details to IRP, the e-invoice data (payload) including IRN, will be saved in GST System.*

*The GST system will auto-populate them into GSTR-1 of the supplier and GSTR-2A of respective receivers. IRN and IRN date will also be shown along with source marked as 'e-invoice' (except where such details were modified/re-uploaded by taxpayer).*

## Q.NO. 111.

> *இ-இன்வாய்ஸ் விவரங்கள் GSTR-1 ல் தானாக நிரப்பப்படுகின்றன. GSTR-1 ஐ தாக்கல் செய்வதற்கு முன் நான் சரிபார்க்க வேண்டுமா?*

*இ-இன்வாய்ஸ் விவரங்கள் GSTR-1 ல் தானாக நிரப்புவது என்பது வரி செலுத்துவோருக்கு நீட்டிக்கப்பட்ட ஒரு வசதி மட்டுமே என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சுய மதிப்பீட்டில், தொடர்புடைய வரி காலத்தில் எழுப்பப்பட்ட ஆவணங்களின்படி துல்லியமான*

*விவரங்களுடன் GSTR-1ஐ தாக்கல் செய்வதற்கான சட்டப்பூர்வ கடமை வரி செலுத்துவோரையே சாரும்.*

*மேலும், GSTR-1ல் சரிபார்ப்புகளின் காரணமாக, GSTR-1ன் அட்டவணையில் சில இ-இன்வாய்ஸ்கள் தானாக நிரப்பப்படாமல் போகலாம். இருப்பினும், GSTR-1 டாஷ்போர்டிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட எக்செல் பைலாகக் கிடைக்கக்கூடும் (தொடர்புடைய பிழை விளக்கத்துடன்). GSTR-1ஐ தாக்கல் செய்வதற்கு முன்பு வரி செலுத்துபவர்களால் இவை திருத்தப்பட்டு மீண்டும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.*

*எனவே, வரி செலுத்துவோர் அனைத்து தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை சரிபார்த்து, தொடர்புடைய சட்ட விதிகளின்படி அதைத் தாக்கல் செய்ய வேண்டும். தானாக நிரப்பப்பட்ட இ-இன்வாய்ஸ்களைத் தவிர, வரி செலுத்துவோர் வரிக் காலத்தில் செய்யப்பட்ட பிற விநியோகங்களின் விவரங்களை GSTR-1இன் அந்தந்த அட்டவணையில் சேர்க்க வேண்டும்.*

### *Whether the notified registered person has to check the details of all e-Invoice before filing GSTR-1, even if they are auto-populated ?*

*It may be noted that the auto-population of details from e-invoices into GSTR-1 is only a facility extended to notified registered person (taxpayer). In self-assessment, the statutory obligation to file GSTR-1 with accurate details as per documents raised during the relevant tax period lies with taxpayer.*

*Further, owing to validations in GSTR-1, some of the e-invoices reported may not get auto-populated in the tables of GSTR-1. However, the same may be available in the consolidated excel file downloaded from GSTR-1 dashboard (with corresponding error description). These may also be corrected and re-uploaded by the taxpayers before filing GSTR-1.*

*Hence, the taxpayer shall verify the data in each field, and file the same, in the light of relevant legal provisions. Other than the auto-populated e-invoices, taxpayers are further required to add details of any other supplies made during the tax period, in respective tables of GSTR-1.*

## Q.NO. 112.

*இ-இன்வாய்ஸ் IRN உருவாக்கியுள்ளதாக எனது சப்ளையர் கூறுகிறார். ஆனால், GSTR-2A இல், அந்த இன்வாய்ஸ்களுக்கு எதிராக IRN இன் விவரங்கள் ஏன் வரவில்லை?*

*வழங்கப்பட்ட ஆவணங்களுக்கு இ-இன்வாய்ஸ்களில் இருந்து GSTR-1இல் தானாக நிரப்பப்பட்ட விவரங்கள், வேறு எந்த காரணங்களாலும் மாற்றப்பட்டுருக்கலாம் மற்றும் தாக்கல் செய்யும் போது சப்ளையரால் திருத்தப்பட்ட/ நீக்கப்பட்ட/ மீண்டும் பதிவேற்றப்படும் சூழ்நிலையில் இது நடந்திருக்க கூடும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் (அதாவது சப்ளையர் மூலம் விவரங்கள் மாற்றப்பட்டால்), மீண்டும் பதிவேற்றப்பட்ட/மாற்றிய விவரங்கள் தெரியும். இருப்பினும், GSTR-1இன் அந்தந்த அட்டவணையில் 'மூலம்', 'IRN' மற்றும் 'IRN தேதி' ஆகியவை காலியாக மீட்டமைக்கப்படும், மேலும் இந்த விவரங்கள் GSTR-2A/2B/4A/6A இல் பிரதிபலிக்காது.*

*எனவே, GSTR-1/2A இல் மட்டும் IRN விவரங்கள் தோன்றாததால், அத்தகைய இன்வாய்ஸ்கள் IRPக்கு தெரிவிக்கப்படவில்லை என்று கருதக்கூடாது.*

*எவ்வாறாயினும், கையொப்பமிடப்பட்ட JSON பைல் (கோப்பு) அல்லது கையொப்பமிடப்பட்ட QR குறியீட்டை (சரம்) பதிவேற்றுவதன் மூலம் இ-இன்வாய்ஸ் நம்பகத்தன்மையை நீங்கள் சரிபார்க்கலாம்: einvoice1.gst.gov.in > **Search** > **'Verify Signed Invoice'**.. மாற்றாக, நீங்கள் இ-*

*இன்வாய்ஸ் நகலில் உள்ள QR குறியீடை "QR குறியீட்டைச் சரிபார்க்கவும்" மொபைல் ஆப் மூலம் ஸ்கேன் செய்யது சரிபார்க்கலாம். einvoice1.gst.gov.in > Help > Tools > **Verify QR Code App** என்பதிலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.*

### *My supplier says they have generated IRN for the invoice. But, in GSTR-2A, details of IRN are not appearing against those invoices, why?*

*It may be possible in a situation where the details auto-populated into GSTR-1 from e- invoices vis-a-vis actual documents issued, might have changed in any respect and the same are edited/deleted/re-uploaded by the supplier while filing GSTR-1. In such cases (i.e. where the details are modified by supplier), the re-uploaded/modified details will be visible. However, the 'Source', 'IRN' and 'IRN date' will be reset to blank in respective tables of GSTR-1 and also the said details won't get reflected in GSTR-2A/2B/4A/6A also.*

*So, non-appearance of IRN details in GSTR-1/2A alone shouldn't be assumed to mean that such invoices were not reported to IRP.*

*You can, however, verify the authenticity of e-invoice by uploading the signed JSON file or Signed QR Code (string) on e-invoice portal: **einvoice1.gst.gov.in > Search > 'Verify Signed Invoice'.** Alternatively, you can scan the QR Code on invoice copy, with **"Verify QR Code" mobile app** which may be downloaded from **einvoice1.gst.gov.in** > Help > Tools > **Verify QR Code App***

## *Q.NO. 113.*

*அறிவிக்கப்பட்ட/ பதிவு செய்யப்பட்ட நபர்கள் GSTR-1ல் தானாக நிரப்பப்பட்டுள்ள அட்டவணையில் இ-இன்வாய்ஸ் (டேட்டா) தரவுகளை நீக்கிவிட்டு சொந்தமாக இ-இன்வாய்ஸ் டேட்டாவை (தரவை) புதிதாக பதிவேற்ற இயலுமா?*

*அறிவிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட நபர்கள் தானாக நிரப்பப்பட்டுள்ள அட்டவணையில் இ-இன்வாய்ஸ் (டேட்டா) தரவுகளை நீக்கிவிட்டு, பின்வரும் முறைகள் மூலம் GSTR-1ல் இ-இன்வாய்ஸ் டேட்டாவை (தரவை) புதிதாக பதிவேற்றலாம்:*

***ஆன்லைன் போர்ட்டலில்**: GSTR-1 டாஷ்போர்டின் கீழே உள்ள 'ரீசெட்' பட்டனைப் பயன்படுத்தி GSTR-1 அட்டவணையில் இருந்து முழு விவரங்களை நீக்கலாம். இதை கிளிக் செய்யவதன் மூலம் அதை நீக்க முடியும் (இ -இன்வாய்ஸில் இருந்து தானாக நிரப்பப்பட்ட பதிவுகள் உட்பட).*

*தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவுகளை மட்டும் நீக்க, GSTR-1 இன் தொடர்புடைய அட்டவணையின் உள்ளே சென்று, பதிவு/களை தேர்ந்தெடுத்து, செயல் நெடுவரிசையில் 'டெலிட்' என்பதைக் கிளிக் செய்யவும். ('Processed Invoices/Documents' table - ப்ரஸெஸ்டு இன்வாய்ஸ்/டாகுமெண்ட்ஸ் டேபில்).*

***ஆ.:ப்லைன் பயன்பாட்டைப் பயன்படுத்துதல்**: பின்வரும் வழிமுறைகளின் மூலம் நீங்கள் பதிவுகளை நீக்கலாம்:*

- *தொடர்புடைய வரி காலத்திற்கு, GSTR-1 JSON ஐப் பதிவிறக்கவும்;*
- *GSTR-1 ஆ.:ப்லைன் கருவியில் JSON ஐத் திறக்கவும்;*
- *'பிரிவைத் தேர்ந்தெடு' என்ற குறியீட்டில் இருந்து அந்தந்த அட்டவணையைத் தேர்ந்தெடுக்கவும்;*
- *'டெலிட் செக்சன் டேட்டா' பொத்தானைக் கிளிக் செய்து, 'ஆம்' என்பதை அழுத்தவும்;*

- *மாற்றாக, நீங்கள் தேர்ந்தெடுத்த பதிவுகளை சரிபார்க்கலாம் அல்லது அனைத்தையும் தேர்ந்தெடு Select Checkboxஐ டிக் செய்து DELETE பொத்தானை அழுத்தவும் (அட்டவணைக்கு கீழே கிடைக்கும்);*
- *தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவு/அட்டவணையில் உள்ள பதிவுகள் நீக்குவதற்காகக் குறிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவீர்கள்;*
- *டெலிட் என்பதைக் கிளிக் செய்தால், பதிவு நீக்கப்பட்டதாகக் குறிக்கப்படும்;*
- *சுருக்கத்தைப் சரிபார்த்து JSON பைல்லை உருவாக்கவும்;*
- *உருவாக்கப்பட்ட JSON ஐ GST போர்ட்டலில் பதிவேற்றம் செய்யவும்*

*பதிவேற்றப்பட்ட JSON செயலாக்கத்திற்குப் பிறகு, அனைத்து/தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவுகளும் அந்தந்த அட்டவணையில் இருந்து நீக்கப்படும்*

*Whether the notified registered persons delete all the auto-populated data and upload the e-invoice data afresh on their own in GSTR-1?*

*The notified registered persons can delete all the auto-populated data and upload the e-invoice data afresh on their own in GSTR-1 by the following methods:*

***On GST-Portal /Online** : The notified registered persons can use the 'RESET' button available at the bottom of GSTR-1 dashboard. Click this to delete complete details from GSTR-1 tables, including the records auto-populated from e-invoice.*

*In order to delete the selected records, one may go inside relevant table of GSTR-1, select record/s and click 'Delete' in action column (in 'Processed Invoices/Documents' table).*

***Using Offline Utility:*** *The notified registered persons can delete the records, offline, by the following steps:*

- *For relevant tax period, download GSTR-1 JSON;*
- *Open JSON in GSTR-1 offline tool;*
- *Select the respective table from the 'Select Section' drop-down;*
- *Click the button 'Delete Section Data' and press 'Yes';*
- *Alternatively, one can check select records or tick Select All check box and hit DELETE button (available below the table);*
- *The notified registered persons will get confirmation that records in the selected section/table are marked for deletion;*
- *Once the delete button is clicked , the record will be marked for deletion;*
- *View Summary and Generate JSON File;*
- *Upload the generated JSON on GST portal;*

*After processing of uploaded JSON, all/selected records will get deleted in the respective tables.*

## Q.NO. 114.

> *எங்களிடம் இ-இன்வாய்ஸ் மற்றும் பெறப்பட்ட பொருட்கள் இருந்தால், உள்ளீட்டு வரி வரவு (ITC) வைத்துக் கொள்ள போதுமானதா?*

*ITC-ஐ பெறுவதற்கு இ -இன்வாய்ஸ் மட்டும் போதாது, ஏனெனில் ITC-ஐ பெறுவதற்கு CGST சட்டம், 2017 பிரிவு 16(2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அதாவது, பொருட்கள்/சேவை பெறுநரால் பெறப்பட்டிருக்க வேண்டும், சப்ளையர் வரி செலுத்தியிருக்க வேண்டும். மேலும், விதி எண் 36(4)-யின் படி GSTR 2B படிவத்தில் இ -*

*இன்வாய்ஸ் விவரங்கள் அளிக்கப்படாவிட்டால் உள்ளீட்டு வரி வரவு வைக்கக் கூடாது.*

*Whether it is sufficient to take the Input Tax Credit (ITC), if the recipient has an E-invoice and received Goods?*

*E invoice alone is not enough to avail Input Tax Credit, since availment of ITC requires fulfilling the conditions stipulated under Sec. 16(2) of the CGST Act, 2017, viz., goods/service should have been received by the recipient; tax should have been discharged by the supplier; relevant returns were filed; and the invoice was received. Further, as per Rule 36(4) of CGST Rules, 2017, no input tax credit shall be availed by a registered person in respect of invoices unless the details of such invoices have been communicated to the registered person in Form GSTR 2B.*

## Q.NO. 115.

*ஏற்றுமதி இ-இன்வாய்ஸுடன் தொடர்புடைய இ -இன்வாய்ஸ் ரத்து செய்யப்பட்டது, எனினும் ஷிப்பிங் பில் தாக்கல் செய்யப்பட்டது. அத்தகைய சூழலில் என்ன செய்வது?*

*ஏற்றுமதியாளர்கள், ஷிப்பிங் பில் தாக்கல் செய்வதற்கு முன், இ-இன்வாய்ஸ் போர்ட்டலில் IRPயில் GST INV-01இல் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் எல்லா வகையிலும் சரியானவை என்பதை உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், ஷ்ப்பிங் பில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு இ-இன்வாய்ஸை ரத்து செய்து புதிய இ-இன்வாய்ஸ் பெற்றால், அந்த விவரங்களை சுங்க சட்டத்தின் பிரிவு 149ன் படி வரம்பிற்குட்பட்ட சுங்க அதிகாரி மூலம் ஷிப்பிங் பில் திருத்தம் செய்து கொள்ளலாம்.*

*The e-invoice associated with the export invoice was cancelled, However the Shipping Bill was filed. What to do in such case?*

*The exporters should ensure that the particulars uploaded in the GST INV-01 on IRP are correct in all respects before filing the Shipping Bill. However, in case the situation warranted cancellation of the e-invoice raised initially, for any reason, the details of the substitute e-invoice issued, by due process, can be sought to be included by way of the post shipment amendment of the shipping bill in terms of the Sec.149 of Customs Act'1962, by the Jurisdictional Deputy Commissioner of Customs (Exports).*

## Q.NO. 116.

### ஏற்றுமதி மீதான IGST வரிப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான நடைமுறை இ-இன்வாய்ஸுடன் இணைக்கப்பட்டுள்ளதா?

*GSTR1, GSTR 3B ரிட்டர்ன் மற்றும் ஷிப்பிங் பில்களில் உள்ள விவரங்களை சரிபார்ப்பதற்காக GSTN போர்ட்டலுடன் IGST ரீஃபண்டை கையாளும் ICEGATE போர்ட்டல் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால, ICEGATE போர்ட்டல இ-இன்வாய்ஸ் போர்ட்டலுடன் இணைக்கப்படவில்லை. எனவே, IGST ரீஃபண்டு முறைகளை சீராகச் செயல்படுத்துவதை உறுதிசெய்ய GSTR1 ரிட்டனில் E-இன்வாய்ஸ் விவரங்கள் மற்றும் தொடர்புடைய ஷிப்பிங் பில் சரியாகக் காட்டப்பட வேண்டும்.*

### *IGST refund on export is it linked with e-invoice?*

*IGST refund is being handled by ICEGATE portal which has been linked with GSTN portal for cross verification of details in GSTR1, GSTR 3B returns and the Shipping Bill (SB). The ICEGATE portal is not being linked with E-Invoice portal, the details of E-Invoices, by all notified registered persons, should be shown correctly in GSTR1 return and the relevant SB to ensure smooth processing of IGST refunds.*

## Q.NO. 117.

**ஒரு அறிவிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட நபர் IRN-ஐ ரத்து செய்யும் போது, அதனுடன் தொடர்புடைய E Waybill தானாகவே ரத்துசெய்யப்படுமா?**

*இல்லை, E Way Bill ஐ முதலில் ரத்து செய்துவிட்டு பின்னர் IRN-ஐ ரத்து செய்ய வேண்டும். இருப்பினும் இ-வே பில் ஏற்கனவே சரக்குகளின் நடமாட்டத்தின் போது, துறை அதிகாரியால் சரிபார்க்கப்பட்டிருந்தால், இ-வே பில்லை ரத்து செய்ய முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய நிகழ்வில் IRNஐயும் கூட ரத்து செய்ய முடியாது.*

*When a notified registered person cancels an IRN, whether the associated E-Way Bill also gets automatically cancelled?*

*No, E-Way Bill (EWB) has to be cancelled first and then only IRN could be cancelled. However, it may be noted that E-Way Bill cannot be cancelled, if it is already verified by departmental officers during physical movement of goods and in such event IRN also cannot be cancelled.*

## Q.NO. 118.

**EWB உருவாக்கத்திற்குப் பிறகு வரி செலுத்துவோர் IRN-ஐ உருவாக்க முடியுமா?**

*இல்லை. இ-வே பில் உருவாக்க CGST விதி 138ன் படி இ-வே பில் படிவத்தின் பகுதி--Aயில் இன்வாய்ஸ் எண், இன்வாய்ஸ் தேதி ஆகியவை IRNல் இருந்து தாமாகவே பெறப்படும். எனவே, இ-வே பில் உருவாக்குவதற்கு முன்பாகவே, IRP மூலம் இ-இன்வாய்ஸ் உருவாக்கப்பட வேண்டும்.*

**Can the taxpayer generate IRN after EWB generation?**

*No. As per the prescribed format under Rule 138 of CGST Rules, 2017, for generation of e-way bill, in Part- A of Form GST EWB-01, the details of invoice such as Number, date etc has to be entered/auto-populated from IRP; and hence an e-Invoice has to be generated by notified registered person on IRP before generation of e-way bill.*

## Q.NO. 119.

**IRP இல், IRN இன் உருவாக்கத்திற்காக GST INV-01 ஐ நிரப்பும் நேரத்தில் டிரான்ஸ்போர்ட்டர் விவரங்கள் கிடைக்காதபோது இ-வே பில்லை எவ்வாறு உருவாக்குவது?**

*IRP இல் இ- இன்வாய்ஸை உருவாக்குவதற்கான GST INV-01ஐ நிரப்பும் நேரத்தில், அறிவிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நபர் போக்குவரத்து விவரங்கள் இல்லாமல் படிவம் GST EWB-01 இன் பகுதி A ஐ உருவாக்க முடியும். பின்னர், படிவம் GST EWB-01 இன் பகுதி- B இல் உள்ள போக்குவரத்து விவரங்களை இ-வே பில் போர்ட்டலில் உள்நுழைவதன் மூலம் புதுப்பிக்கலாம், இது ஒரு செல்லுபடியாகும் E Way Bill ஆக மாறும். இல்லையெனில், அறிவிக்கப்பட்ட/பதிவு செய்யப்பட்ட நபர் IRP.யில் IRN ஐ மட்டுமே பெற முடியும், பின்னர் IRN-ஐ மேற்கோளாகப் பயன்படுத்தி, ஈ-வே பில் அல்லது பகுதி ஏ ஸ்லிப்பை இ-வே பில் போர்ட்டலில் உள்நுழைவதன் மூலம் உருவாக்க முடியும்.*

**How to generate e-way bill when the transporter details are not available at the time of filling GST INV-01 for generation of IRN, on IRP?**

*At the time of filling GST INV-01 for generation of e-invoice on IRP, notified registered person can generate Part A of Form GST EWB-01 without transportation details. Later transportation details in Part- B of Form GST EWB-01 can be updated by logging into e-way bill portal, to make it a valid E Way Bill.*

*Otherwise, notified registered person can obtain only IRN on IRP then using the IRN as reference, either E Way Bill or Part A slip can be generated by logging into e-way bill portal.*

## Q.NO. 120.

***ஏற்றுமதிகளுக்கு இன்வாய்ஸ் உருவாக்கும் சமயங்களில் இன்வாய்ஸ் படிவத்தில் பெறுநரின் GSTIN பற்றிய தகவல்களை எவ்வாறு நிரப்ப வேண்டும்?.***

*ஏற்றுமதி இன்வாய்ஸ்-களுக்கு, பெறுநரின் GSTIN 'URP' ஆகவும், மாநிலம் 'பிற நாடு' ஆகவும் (மாநிலக் குறியீடு: 96 அல்லது 99) மற்றும் PIN குறியீடு '999999' ஆகவும் நிரப்ப வேண்டும்.*

***How to fill the field for GSTIN of recipient in Form GST INV-01 in case of exports?***

*In case of exports, the notified registered person can fill / select the GSTIN of recipient column as 'URP', State column as 'other country' State code column as '96 or 99' and PIN Code column as '999999'in Form GST INV-01.*

# இ-இன்வாய்ஸ் - ஆதாரங்கள் உதவி கருத்து

| | |
|---|---|
| இ-இன்வாய்ஸ் பற்றிய கூடுதல் தகவல்கள் அறிய | 'e-invoice - Detailed Overview' |
| இ-இன்வாய்ஸ் தொடர்பான விழிப்புணர்வு வீடியோக்கள் பார்க்க | https://www.youtube.com/playlist?list=PLwd4X2n8j gXyZY81IB770rzOHZn4CCCUo |
| இ-இன்வாய்ஸ் பற்றிய உதவிகள் மற்றும் புகார்களுக்கு | https://selfservice.gstsystem.in/ReportIssue.aspx |
| இ-இன்வாய்ஸ் பற்றிய பின்னூட்டம் மற்றும் பரிந்துரைகள் தெரிவிக்க | e-invoice@gstn.org.in and/or ccu-cexchn@nic.in / cxchn-ehelpproc@gov.in |
| சந்தேகங்கள் மற்றும் பிற தகவல்களுக்கு அருகில் உள்ள வரிசெலுத்துவோர் சேவை மைய அதிகாரிகளை தொடர்பு கொள்ள, பக்கம் 130ல் உள்ள விவரங்களை பார்க்கவும். | |

*****

# e-Invoice - Resources, Help & Feedback

| | |
|---|---|
| *In order to know more about e-invoicing, please visit* | https://einvoice1.gst.gov.in/ |
| *In order to view the videos on e-invoicing, please visit* | https://www.youtube.com/playlist?list=PLwd4X2n8jgXyZY81lB770rzOHZn4CCCUo |
| *In order to seek help on e-invoicing, please raise a ticket @* | https://selfservice.gstsystem.in/ReportIssue.aspx |
| *In order to share feedback & suggestions on e-invoicing, please address* | e-invoice@gstn.org.in and/or<br>ccu-cexchn@nic.in<br>cxchn-ehelpproc@gov.in |
| *In order to speak to the officers for seeking clarifications on e-Invoice, please contact the Taxpayer Facilitation center at the nearest place as per the details at Page 132* | |

ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் வரி முதன்மை தலைமை ஆணையர் அலுவலகம்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலம்

உதவி எண்கள்

ஜிஎஸ்டி சேவை மையங்களின் உதவி எண்கள்

| வ. எ. | ஆணையரகம் | முகவரி | தொலை பேசி எண் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| 1 | ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் வரி முதன்மை தலைமை ஆணையர் அலுவலகம், சென்னை மண்டலம் | 26, ஜிஎஸ்டி பவன், 1, உத்தமர் காந்தி சாலை, மேற்கு ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ் நாடு 600034 | 044-28331010 | ccu-cexchn@gov.in, cxchn-ehelpproc@gov.in |
| 2 | சென்னை வடக்கு | வரிசெலுத்துவோர் சேவை மையம் 26/1, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ் நாடு -600034 | 044-28331009 | gstsevakchn@gmail.com |
| 3 | சென்னை தெற்கு | வரிசெலுத்துவோர் சேவை மையம் எண் 692, எம்ஹெச்யு வளாகம், அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600035. | 044-24338619 | chsouth-sevakendra@gov.in |
| 4 | சென்னை புறநகர் | வரிசெலுத்துவோர் சேவை மையம் 12-வது பிரதான சாலை, அண்ணா நகர் மேற்கு, சென்னை, தமிழ் நாடு - 600040 | 044-26142851 | sevakendra-outer-tn@gov.in |
| 5 | கோயம்பத்தூர் | வரிசெலுத்துவோர் சேவை மையம் 6/7, ஏடீடி தெரு, ரேஸ் கோர்ஸ், | 0422-2225578 | actechhqrscbe.cgst@gov.in |

| வ. எ. | ஆணையரகம் | முகவரி | தொலை பேசி எண் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| | | கோயம்பத்தூர் - 641 018 | | |
| 6 | மதுரை | வரிசெலுத்துவோர் சேவை மையம் எண் 04, லால் பகதூர் சாஸ்திரி சாலை, சிஆர் பில்டிங், பிபி குளம், மதுரை-625002 | 0452-2532481 | mducgst-sevakendra@gov.in |
| 7 | திருச்சி | வரிசெலுத்துவோர் சேவை மையம் எண் 1, வில்லியம்ஸ் சாலை, கண்டோன்மெண்ட், திருச்சி - 620001 | 0431 - 2461646 | gstsevakendratrichy@gmail.com |
| 8 | சேலம் | வரிசெலுத்துவோர் சேவை மையம் எண் 1, ஃபௌல்க்ஸ் காம்பௌண்ட், ஆனைமேடு, சேலம் 636001 | 0427 - 2529140 | slmgstseva@gmail.com |
| 9 | புதுச்சேரி | வரிசெலுத்துவோர் சேவை மையம் எண் 104, கவுபர்ட் அவென்யூ, கடற்கரை சாலை, புதுச்சேரி - 605001 | 0413 - 2221999 | help-pycgst@gov.in |

*O/o Principal Chief Commissioner of GST & Central Excise*

*Tamilnadu and Puducherry Zone*

*Helpline Numbers*

## *Helpline Numbers of Taxpayers Facilitation Centres*

| ***Sr. No.*** | ***Office / Commissionerate*** | ***Address*** | ***Phone*** | ***Email*** |
|---|---|---|---|---|
| *1* | *O/o Principal Chief Commissioner of GST and Central Excise, Chennai Zone* | *26, GST Bhawan, 1, Uthamar Gandhi Rd, Thousand Lights West, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034* | *044-28331010* | *ccu-cexchn@gov.in, cxchn-ehelpproc@gov.in* |
| *2* | *Chennai North* | *Taxpayers Facilitation Centre, Chennai North Commissionerate, 26/1, Mahatma Gandhi, Road, Nungambakkam, Chennai-600034* | *044-28331009* | *gstsevakchn@gmail.com* |
| *3* | *Chennai South* | *Taxpayers Facilitation Centre, No.692, MHU Complex, Anna Salai, Nandanan, Chennai - 600035.* | *044-24338619* | *chsouth-sevakendra@gov.in* |
| *4* | *Chennai Outer* | *Taxpayers Facilitation Centre, Newry Towers, 12th Main Rd, Anna Nagar West, Chennai, Tamil Nadu 600040* | *044-26142851* | *sevakendra-outer-tn@gov.in* |
| *5* | *Coimbatore* | *Taxpayers Facilitation Centre, 6/7, ATD street, Race course, Coimbatore - 641 018* | *0422-2225578* | *actechhqrscbe.cgst@gov.in* |

| ***Sr. No.*** | ***Office / Commissionerate*** | ***Address*** | ***Phone*** | ***Email*** |
|---|---|---|---|---|
| *6* | *Madurai* | *Taxpayers Facilitation Centre, No.04, Lalbahadur Shastri Road, Cr Building, BibiKulam, Madurai-625002* | *0452-2532481* | *MDUCGST-SEVAKENDRA@GOV.IN* |
| *7* | *Trichy* | *Taxpayers Facilitation Centre, No. 1, Williams Road, Cantonment, Trichy - 620001* | *0431-2461646* | *gstsevakendratrichy@gmail.com* |
| *8* | *Salem* | *Taxpayers Facilitation Centre, No.1, Foulkes Compound, Anaimedu, Salem 636001* | *0427-2529140* | *slmgstseva@gmail.com* |
| *9* | *Puducherry* | *Taxpayers Facilitation Centre, Post Box No.104, Goubert Avenue, Beach Road, Puducherry-605001.* | *0413-2221999* | *help-pycgst@gov.in* |

## *ABBREVIATION - சுருக்கம்*

| *ABBREVIATION - சுருக்கம்* | *Explanation* | *விளக்கம்* |
|---|---|---|
| *IRP* | *Invoice Registration Portal* | *இன்வாய்ஸ் பதிவு இணைய முகப்பு* |
| *IRN* | *Invoice Reference Number* | *இன்வாய்ஸ் குறிப்பு எண்* |
| *QR Code* | *Quick Reference Code* | *க்யு ஆர் குறியீடு* |
| *ERP* | *Enterprise Resource Planning* | *ஈஆர்பி* |
| *JSON* | *Java Script Object Notation* | *ஜாவா ஸ்கிரிப்ட் பொருள் கருத்து* |
| *NIC* | *National Informatics Centre* | *தேசிய தகவல் மையம்* |
| *NIC-GePP* | *NIC - GST e-invoice Preparing & Printing* | *தேசிய தகவல் மையம் GST - இ இன்வாய்ஸ் தயாரித்தல் மற்றும் அச்சடித்தல்* |
| *GSP* | *GST Suvidha Provider* | *GST வசதி வழங்குபவர்* |
| *B2B* | *Business to Business* | *வணிகர்களுக்கிடையே* |
| *B2C* | *Business to Customer* | *வணிகர் மற்றும் பயனாளர்களுக்கிடையே* |
| *GSTN* | *Goods and Service Tax Network* | *GST வலைப்பின்னல்* |
| *GSTIN* | *Goods & Services Tax Identification Number* | *GST பதிவு எண்* |
| *NBFC* | *Non Banking Financial Company* | *வங்கி அல்லாத நிதி நிறுவனம்* |

| ABBREVIATION - சுருக்கம் | Explanation | விளக்கம் |
|---|---|---|
| GTA | Goods Transport Agency | சரக்கு போக்குவரத்து நிறுவனம் |
| FTWZ | Free Trade Warehousing Zone | தடையில்லா வர்த்தகக் கிடங்கு மண்டலம் |
| ISD | Input Service Distributor | உள்ளீட்டு சேவை விநியோகஸ்தர் |
| TCS | Tax Collected at Source | மூலத்தில் வசூலிக்கப்படும் வரி |
| TDS | Tax Deducted at Source | மூலத்தில் கழிக்கப்பட்ட வரி |
| GST API | GST Application Programming Interface | GST பயன்பாட்டு இடைமுகம் |
| RCM | Reverse Charge Mechanism | ரிவர்ஸ் சார்ஜ் மெக்கானிசம் |
| HSN | Harmonised System of Nomenclature | பெயரிடலின் ஒத்திசைவான முறை |
| LUT | Letter of Undertaking | உத்தரவாத கடிதம் |
| EWB | Electronic Way Bill | மின்னணு வழி சீட்டு |
| DBN | Debit Note | பற்றுக் குறிப்பு |
| CDN | Credit Note | வரவுக் குறிப்பு |


Azadi Ka Amrit Mahotsav
24/7 365
TAXPAYERS SERVICE OVER PHONE
TO CONTACT ANY COMMISSIONERATE OF TAMILNADU & PUDUCHERRY ZONE
Call Us @
+91 94458 98686
CHENNAI NORTH
CHENNAI SOUTH
CHENNAI OUTER
COIMBATORE
MADURAI
TIRUCHIRAPALLI
SALEM
PUDUCHERRY
CALL BACK BY OFFICERS FOR CALLS NOT CONNECTED
GST & CENTRAL EXCISE
TAMILNADU AND PUDUCHERRY ZONE

## I Acknowledge...

- **M.M. Parthiban, Principal Commissioner**
- **Sudha Koka, Commissioner**
- **R. Gopalsamy, Additional Commissioner**
- **M.K. Madhivanan, Assistant Commissioner**
- **Leema P Jose, Superintendent**
- **K.P. Balaji, Superintendent**

*For their sincere efforts in compiling this Frequently Asked Questions from different sources, translation to Tamil and publishing it as book for the benefit of trade and industry.*

**Mandalika Srinivas**
**Principal Chief Commissioner**

---

## நன்றிகளும் ஒப்புகைகளும்...

- **M.M. பார்த்திபன், முதன்மை ஆணையர்**
- **சுதா கோகா, ஆணையர்**
- **R. கோபால்சாமி, கூடுதல் ஆணையர்**
- **M.K. மதிவாணன், உதவி ஆணையர்**
- **லீமா P. ஜோஸ், கண்காணிப்பாளர்**
- **K.P. பாலாஜி, கண்காணிப்பாளர்**

பல்வேறு ஆதாரங்களில் இருந்து, இந்த அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைத் தொகுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, வணிகம் மற்றும் தொழில்துறையின் நலனுக்காக புத்தகமாக வெளியிடுவதில் அவர்களின் முயற்சிகளுக்காக

**மண்டலிகா ஸ்ரீனிவாஸ்**
**முதன்மை தலைமை ஆணையர்**

*Notes*

*Notes*

*Notes*


*Notes*

*Notes*

*Notes*

*Notes*



பொது நலன் கருதி வெளியிடுவோர்

**முதன்மை தலைமை ஆணையரகம்,**
**சரக்குகள் மற்றும் சேவைகள் வரி & மத்திய கலால் வரி,**
**தமிழ் நாடு & புதுச்சேரி மண்டலம்,**

***Issued in public interest***
***Office of the Principal Chief Commissioner of GST & Central Excise,***
***Tamil Nadu and Puducherry Zone, Chennai.***

*Follow us* ***@cgstchennaizone***